கனலாய்... எரிகிறது...



கே.எம்.ஏ.அஸீஸ்

உமினைகள்

கனலாய் ...
எரிகிறது....

[கவிதைத் தொகுதி]

கே. எம் ஏ. அஸீஸ்

ஞானம்
பதிப்பகம்

3-B, 46ஆவது ஒழுங்கை,
கொழும்பு - 06

தலைப்பு	:-	கனலாய்... எரிகிறது... (கவிதைத் தொகுதி)
நூலாசிரியர்	:-	கே. எம். ஏ. அஸீஸ்
உரிமை	:-	புரவலர் புத்தகப் பூங்கா இல 25, அவ்வல் சாவியா றோட், கொழும்பு – 14 தொ.பே: 0774161616, 0785318503
முதற்பதிப்பு	:-	கார்த்திகை 2007
அச்சுப்பதிப்பு	:-	யுனி ஆர்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் 48B, புளுமெண்டல் வீதி, கொழும்பு–13 தொ.பே:– 2330195
வெளியீடு	:-	ஞானம் பதிப்பகம் 3B - 46ஆவது ஒழுங்கை கொழும்பு – 06. தொ.பே: 011–2586013, 0777306506
விலை	:-	150/=

Title	:-	Kanalai Erikirathu
Author	:-	K.M.A. Azeez
Copy Rights	:-	Puravalar Puthaka Poonga 25, Awal Savia Road, Colombo - 14 T.P : 077 4161616, 078 5318503
First Edition	:-	November 2007
Printed	:-	Unie Arts (Pvt) Ltd. 48B, Bloemendhal Road, Colombo-13. T.P:- 2330195
Publishers	:-	Gnanam Pathippakam 3B, 46th Lane, Colombo - 6. T.P:- 011-2586013, 0777306506
Price	:-	150/=

ISBN :- **978-955-8354-16-2**

பதிப்புரை

நமது நாட்டைப் பொறுத்த வரையில் எழுத்தாளர்கள் தமது படைப்புக்களை நூலுருவாக்குவதில் பெரும் சிரமங்களை எதிர் கொள்ள வேண்டியுள்ளது.

நூல்களை அச்சிடும் செலவு இன்று பலமடங்காக அதிகரித் துள்ளது. பதிப்பித்தல், வெளியீடு செய்தல், விநியோகித்தல், போன்ற சகலவற்றையும் எழுத்தாளனே செய்யவேண்டியுள்ளது. அவற்றோடு எழுத்தாளனே வெளியீட்டு விழாவை ஒழுங்குசெய்து தனது நூலை விற்பனை செய்யவேண்டியுள்ளது. வெளியீட்டு விழாவில் ஒரு சில பிரதிகளே விற்பனையாகின்றன. அதிலே கிடைக்கும் பணம் சில வேளைகளில் விழாச் செலவினை ஈடுசெய்யவே போதுமானதாக இருப்பதில்லை. மிகுதிப் புத்தகங்கள் யாவும் எழுத்தாளன் வீட்டுக்குள்ளேயே வருடக் கணக்காக முடங்கிப் போய்க் கிடக்கும் அவல நிலைதான் பல எழுத்தாளர்களின் அனுபவமாக இருக்கிறது.

இலக்கியப் புரவலர் அல்ஹாஜ் ஹாசிம் உமர் அவர்கள் இதுவரை நானூறுக்கும் மேற்பட்ட முதற் பிரதிகளை வெளியீட்டு விழாக்களிலே பெற்றுச் சாதனை புரிந்து வருகிறார்.

முதற் பிரதி பெறுவதில் இது ஒரு 'கின்னஸ்' சாதனை என்பதிலும் பார்க்க அவர் வழங்கும் பணத்தொகை மூலம் எழுத்தாளர்களின் சுமையின் ஒரு பகுதியைக் குறைக்க முயன்றிருக் கிறார் என்பதே கவனத்தில் கொள்ளப் படவேண்டியதாகும்.

புரவலர் அவர்கள் இலக்கியவாதிகளைக் கைதூக்கும் வழிகளைச் சிந்தித்துச் செயற்படுகிறார் என்பதற்குச் சான்றாக 'புரவலர் புத்தகப் பூங்கா' என்ற அமைப்பினை உருவாக்கியுள்ளார்.

இதுவரை காலமும் ஒரு நூலைத்தானும் வெளியிட இயலாமல் கஷ்டப்படும் எழுத்தாளர்களின் நூல்களை இந்த அமைப்பின் மூலம் வெளிக்கொணர்வதோடு அந்த நூல்களுக்கு வெளியீட்டு விழாக்களையும் தாமே நடத்தி அவ்விழாக்களில் கிடைக்கும் பணம் முழுவதையும் நூலின் சொந்தக்காரருக்கு வழங்குவதோடு இனாமாக முந்நூறு பிரதிகளையும் அந்த எழுத்தாளருக்குக் கொடுக்கவும் முன்வந்துள்ளார். இது ஒரு மகத்தான பணி. இந்தப் பணியில் அவர் 'ஞானம் பதிப்பகத்தை' யும் இணைத்துச் செயலாற்ற வந்திருப்பது எமக்கு மகிழ்வைத் தருகிறது.

ஞானம் பதிப்பகத்தின் செயற்பாடுகள் விரிவடைவதற்கும் ஞானம் சஞ்சகையின் அறிமுகத்துக்கும் பரவலாக்கத்துக்கும் இது ஏதுவாகும் என நம்புகிறேன்.

புரவலர் புத்தகப் பூங்காவின் இரண்டாவது நூலாக 'கனலாய் எரிகிறது' என்ற கே.எம்.ஏ அஸீஸின் இக் கவிதைத் தொகுதி வெளிவருகிறது. நீண்டகாலமாகத் தனது கவிதைத் தொகுதியை வெளியிடமுடியாமல் இருந்த இவரது கவிதைத் தொகுதி புரவலர் புத்தகப் பூங்காவினூடாக வெளிவருவது எமது நோக்கத்தை நிறைவுசெய்வதாக அமைகிறது.

புரவலரின் பணி சிறக்க வேண்டும். புதிய எழுத்தாளர்கள் 'புரவலர் புத்தகப் பூங்கா' வெளியீட்டுத் திட்டத்தை நன்கு பயன்படுத்திப் பயனடைய வேண்டும். இலங்கை தமிழ் நூல்களின் வெளியீட்டு முயற்சிகளில் புரவலர் புத்தகப் பூங்கா சாதனை படைக்கும் எனத் திடமாக நம்பலாம்.

தி. ஞானசேகரன்
பதிப்பாசிரியர்.
5.11.2007

3-B, 46வது ஒழுங்கை,
கொழும்பு – 06
தொ.பே – 011-2586013, 0777306506

இதழாசிரியர்
இதயத்தில் இருந்து...

காலத்தின் கண்ணாடி போன்றதே இலக்கியம் ஆகும். ஒரு உருவத்தைத் தத்ரூபமாகப் படம் பிடித்துக் காட்டும் கண்ணாடி போல் உலக நடப்புகளை ஒளிவு மறைவின்றி எடுத்துக்காட்டவல்ல அபாரசக்தி இலக்கியம் என்ற கண்ணாடியூடாக எடுத்தாளப் படுகிறது. இலக்கியம் என்ற நறுஞ்சோலைக்குள் பூத்த மலர்களாக கவிதை, கட்டுரை, நாவல், சிறுகதை, நாடகம் போன்ற இன்னோரன்ன அம்சங்களைக் குறிப்பிடலாம். இவற்றின் ஊடாக ஆக்கபூர்வமான கருத்துக்களை சமூகத்தின் கண் தத்ரூபமாகத் தோலுரித்துக் காட்டுபவர்களைத்தான் இலக்கியவாதிகள் என்கிறோம்.

இலட்சியம் இல்லா இலக்கியம் என்பது உப்பில்லாப் பண்டம் போல ஒன்றுக்கும் உதவாததாகவே மதிக்கப்படுகின்றது. உலகத்தின் கண் ஊசலாடுகின்ற ஊழல்களைத் தான் சார்ந்ததாக இலக்கியத்தின் ஊடாக வெளிக்கொணர விழைவதற்கு முன் அப்படைப்பாளியான இலக்கியவாதி பரிசுத்தமான இலட்சியநோக்கும், பக்குவமானதன்மையும் கொண்டவராக இருந்தாலன்றி, அப்படைப்பால் சமூகத்திற்கோ ... தனக்கோ எந்தவித நன்மையும் ஏற்படப்போவதில்லை.

இந்தவகையில் கவிதைத் துறை ஊழல் ஒழிப்பில் ஒரு கலங்கரை விளக்கமாக அமைகிறது. உள்ளத்தில் ஊற்றெடுக்கும் உணர்வுகள் கவிந்து அது மாற்றாரின் மனக்கண்முன் ஊடறுத்து உள்ளத்தில் தைக்கின்றபோது அது கவி + தை (கவிதை) ஆகிறது. 1976களில் இருந்து நேரடியாக அனுபவித்த பல அனுபவங்களின் சங்கமத்தில் அவை இதயக் கனல்களாக எரிந்தபோது ஏற்பட்ட உணர்வுக் கருவூலங்களே "கனலாய் எரிகிறது" என்ற இக் கவிதைத் தொகுப்பின் வெளிப்பாடாகும்.

1984ம் ஆண்டு வர்த்தகக் கப்பல் துறை அமைச்சின் ஆதரவில் ஆக்கவுரிமை வியாபாரக்குறி பதிவகத்தினால் தேசிய ரீதியிலான ஊக்குவிப்பு இரண்டாம் வருட இலக்கியப் போட்டியின் ஒரு அங்கமான இருபத்தைந்து கவிதைகள் கொண்ட அதிசிறந்த கவிதைத் தொகுப்பிற்கான முதற்பரிசுக்கான சான்றிதழும், ரூபா ஐயாயிரம் ரொக்கப்பரிசும் கிடைத்தன. அக்கவிதைகளோடு மேலும் பல கவிதைகளை உள்ளடக்கி இத் தொகுப்பை புரவலர் புத்தக பூங்கா ஊடாக ஞானம் பதிப்பகத்தாரால் வெளியிட்டு வைப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். இதய சுத்தியோடு எதனையும் மென்மேலும் வளர வேண்டும் என வாழ்த்துகிறேன்.

கவிதைத்துறை வளர்ச்சிக்குக் களமமைத்து உற்சாகமூட்டிய தினபதி, சிந்தாமணி. தினகரன், இலங்கை ஒலிபரப்புக் கூடுத்தாபனம், மற்றும் இதற்காக உதவிய அனைவர்க்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதில் மகிழ்சியடைகிறேன். இதில் ஏதும் குறைகாணின் குற்றம் களைந்து, குணமழையவேண்டுமாறு வாசகர்களாகிய உங்களைக் கேட்டுக் கொள்கின்றேன்.... நன்றி

அன்புடன்
K.M.A. அஸீஸ்

91/1A, கல்யாண ரோட்,
சாய்ந்தமருது – 11

MY ADDRESS
K.M.A.AZEEZ
91/1A,KALYANA ROAD
SAINTHAMARUTHU.11

அணிந்துரை

எது கவிதை?
து கவிதை இல்லை?
ப்படி இருக்க வேண்டும் கவிதை?
என்ற ஆராய்ச்சிகளின் அரங்கேற்றம் நாளுக்கு நாள்.

ஆராய்ச்சிகள் பிரசவிக்கும் முடிவுகள் எவ்வாறு இருப்பினும், பிசிறின்றி – மிகத்தெளிவாக... மிகமிகத் தெளிவாக வாசகனை சென்றடையும் படைப்பாக இருந்தாற்றான், அது படைப்புக்களில் சிறந்த படைப்பு.

அறிவுக்கு அறுவைச் சிகிச்சை நடத்தும் சோதனைகள் – வார்த்தைகளில் ஒரு செப்படிவித்தைக்காரனின் மாயஜாலம் – மூன்றாம் முறைக்குப் பின்னும் புரியாத சொற்சிலம்பம் – இவைகள்தான் நல்ல படைப்புக்கு ஆதாரம் என்பதிலே நான் ஒரு அந்நியன்.

மழலைகள் கட்டும் மணல் வீடுகளில் கிடைக்கிற மகிழ்ச்சிகூட, வாஸ்து முறைப்படி வாசல் வைத்து கட்டும் மாளிகைகளில் – சில வேளைகளில் இல்லாமல் போய்விடுகிறது.

'கனலாய் எரிகிறது' கூட ஒரு மணல் வீடுதான். ஆனால் அந்த மணலிலே பரவிக்கிடக்கிற ஒவ்வொரு கல்லும் கவிதை முத்துக்களாக அல்லவா காட்சி தருகின்றன.
காட்சி தரும் கவிதைகளில் எல்லாம் கே. எம். ஏ. அஸீஸ் எனும் இளம் கவிஞனின் முகமும் முகவரியும் அல்லவா நமக்குத் தெரிகின்றன.

அதனால் தானா புரவலர் புத்தகப் பூங்காவின், மாதம் ஒரு நூல் – இலவச வெளியீட்டுத் திட்டம் இப்புது மலருக்கு அங்கீகாரம் அளித்திருக்கிறது?

சில பூங்காக்களில் பூத்திருக்கும் மலர்களில் வாசமில்லா மலர்களும் இருக்கும்

வாசமுள்ள மலர்களும் இருக்கும்
புரவலர் புத்தகப் பூங்காவில் பூத்திருக்கும் இக்கவிதை மலர்களில்
மணமும் உண்டு,
குணமும் உண்டு, கனமும் உண்டு.

இலட்சியம் இல்லா இலக்கியம் – உப்பிலாப்பண்டம் என்கிறார் கவிஞர் அஸீஸ்
அந்தக் குறிக்கோளுடன் இவரும் தன் இலட்சியங்களுக்கு கவிதை மூலம் சிறகு கட்டியிருக்கிறார்
"சுரண்டல் வழியில் திரண்ட பொருளை
சுகமாய் வாழ்வில் சுகிர்த்து வாழும்
வரண்ட உளத்தோர்..." என்ற கவிதா வரிகளில்
சுரண்டலைக் கூட பொறுத்துக் கொள்ளும் இவரால் வரண்ட
உளத்தைக் கண்டு
வாழாதிருக்க முடியவில்லை. அதனால் இவரது நெஞ்சம் கனலாய் எரிகிறது.
அந்தக் கனலில் கவிதைகள் தீக்குளித்து எழுகின்றன.
"அறிவுத் துறையில் ஆட்டம் கண்டு
கண்ணேயிருந்தும் கண்ணில் இரண்டு
புண்கள் ஆகிப் புலம்புதல் கண்டோம்..."
"அறிவின் நிழலில் அகிலம் வெல்லும்
குறியில் நின்று குலத்தைக் காண்போம்!"
என்று அறிவுப் பசிக்கு அஸீஸ் எம்மை அடிமைப்படுத்தும் போது...
அவர்மீது அளவுக்கு மீறிய பாசம், எனக்குள் அறிவுக்கு மீறிய நேசம்!
"முப்பது வயதாகிய மூப்பெய்திய என் தங்கை
இப்போதும் உள்ளாள் என் செய்வேன் – கப்பல்
விலையேறி மாப்பிள்ளை ஏலம் நடப்பதனால்
சிலையாகி நிற்கின்றேன் சிதைந்து"
என்று குமுறுகிற போது... முதிர் கன்னிகளின்
முனகல்களுக்கும் ஒரு விடியல் வேண்டும் என்பதில்
இவர் விழிப்பாக இருப்பதை, இவரது கவிதைச் செழிப்புக்கள்
கண் சிமிட்டிக் காட்டுகின்றன.
"சந்தியில் குந்தாதே"
சலனங்கள் அதுவாகும்
இளைய தலைமுறைகளுக்கான ஏக்கப் பெருமூச்சு இது,

பொறுப்பற்ற இளைஞர்களின் மூடத்தனத்தை முட்டுகிறது;
மூளைச் சலவை
செய்கிறது கவிதையின் உள்ளடக்கம்.
புதிய விடியலுக்காக...
அன்புள்ள தங்கைக்கு!
எழுதுகோல் அழுகிறது
அப்பக்கார ஆச்சி
அந்த நாட்கள்
போன்ற கவிதைகள் அவரது நெஞ்சை நெருடிக் கொண்டிருக்கும்
மறந்து போகாத மனப்பதிவுகள்.
இடைக்கிடையே ஆத்மீகத்தையும் அள்ளித் தெளித்து இருக்கிறார்
அவை அறிவார்ந்த தளத்திற்கு மனதை அழைத்துச் செல்கின்றன
காதலில் அவதாரம் எடுத்துள்ள கவிஞர்கள் மலிந்துள்ள இன்றைய
காலகட்டத்தில்
காதலைப் பற்றி ஒரு கவிதைகூட எழுதாததை உற்றுநோக்கும் போது,
"இவர் ஒருவித்தியாசமான கவிஞர்"
என்பதை உணரக்கூடியதாக இருக்கிறது.

மனித சமுதாயம் மாற்றம் பெறவேண்டும்; ஏற்றம் பெறவேண்டும். அதற்குக் கவிதைகள் பயன்பட வேண்டும் என்ற நம்பிக்கை நாற்றை நடவு செய்யும் உயரிய நோக்கோடு

கவிஞர் அஸீஸ் கவிதைகளுடன் கைகுலுக்கி உள்ளார்.
இவரது கவிதைகள் நிச்சயம் காலத்தால் கணிப்பு பெறும்
எழுதுங்கள்... எழுதிக் கொண்டே இருங்கள்.

அன்பன்,
கலைச்செல்வன்.

பொருளடக்கம்

	விடயம்	பக்கம்
1.	ஒரு பிரார்த்தனை	1
2.	கனலாய் எரிகிறது	2
3.	பணி செய்ய எழுந்திடு	3
4.	எழுதுகோல் அழுகிறது	4
5.	வள்ளம் மிதக்குதுபார்	5
6.	அப்பக்கார ஆச்சி	6
7.	காற்றே...! உன் சீற்றம் ஏனோ...?	7
8.	உலகியல் நாடகம்	9
9.	அழாதே என் கண்ணே...!	11
10.	அண்ணலார் வாழ்வில் அரிய சம்பவம்	12
11.	குயில் விடு தூது	14
12.	அந்த நாட்கள்	16
13.	அறிவின் நிழலில்...	18
14.	உலகை நோக்கிய ஓர் ஆத்மாவின் சலனம்	20
15.	வாழ்க்கைப் படகு	24
16.	சமூக உடன்பாடும்... தனித்த வாழ்க்கையும்	25
17.	ஏனிந்த இடமாற்றம்...!	26
18.	பசுமை காண வாருங்கள்	28
19.	வழிப்போக்கனும், கூலியாளும்	29
20.	இறுதி ஆசை	31
21.	சுனாமியின் பின்னர்	32
22.	வழி காணுவோம்	36
23.	காசிம் காக்கா	37
24.	சந்தியில் குந்தாதே	39
25.	கட்டாக்காலிகள்	40
26.	மாலைப் பொழுதினிலே	42
27.	பொறுமைசாலிகள்	43
28.	பாலையில் ஓராத்மா	44
29.	ஓடி வாங்க	46
30.	பெருநாள் பரிசு	47
31.	நீ... தருவாயா...?	49
32.	கல்முனை கடற்கரை	50
33.	நச்சுப் பாம்புகள்	52
34	சூரிய காந்தி	54
35.	இருளும் ஒளியும்	55
36.	இது என்ன நிலையோ?	57
37.	புதிய விடியலுக்காக	58
38.	அன்புள்ள தங்கைக்கு	59
39.	இதய வானில்	60
40.	இன்பமும்... துன்பமும்...	61
41.	கோழியே... நீ கூவாதே...	62
42.	உணர்வெழும் போதினிலே...	63
43.	மாதா... மலரடியில்...	64
44.	தியாகத்தில் மலர்ந்ததே தீனுல் இஸ்லாம்	65

ஒரு பிரார்த்தனை

நெறி நிலை மாறா முழு உல காளும்
நித்தியனே! இறையோனே! நின்
பதமலர் தொழுதே பயன் பெறவே ஒரு
பா மலர் நின் அடியினையே
சிறையினுள் பட்ட சிறு பறவைபோல்
சிணுங்கிய உணர்வுகளோடே
கறையகல் வேண்டிக் களிகொளவே நின்
கனி முகம் ஈந்தேன் ஏற்பாய்.

மானுடம் இன்று மதியினைக் கொன்று
மடமையின் ஆழியுள் சென்று
ஊனுடம்பாகி ஒரு சிறு துரும்பாய்
உலவுதல் காணக் கனலாய்
எரிகிற நெஞ்சில் எண்ணெய் வார்த்திடும்
எளியோர் அவர் நெஞ் சூடே
புரிகிற தன்மை புகுத்திடவே ஒரு
புதுமலர் ஈந்தேன் ஏற்பாய்.

நெஞ்சக் கறையோ நிறைந்தது; அறிவேன்
நிச்சயம் நிறை மனதோடு
கொஞ்சமும் கொடுமை செய்திட விரும்பா
கொற்றவனே! நின் அருளால்
தஞ்சம் என்றே தயவுடன் இப் பா
மாலை தந்தேன் ஏற்றே
வஞ்சகம் சூழ்ச்சி வலுவினை அகல
வல்லவனே அருள்வாயே!

நாடு செழித்திட; நன்னெறி ஓங்கிட
நாமெலா மோர் குலமாகி
கூடு தணிந்து சுகம் பெறவே தீய
சூழ்ச்சிகள் மண்ணுள் புதைந்து
வேரறவே; விடி வாகிய தென்றல்
விரைந்து எத் திக்கு மொலிக்க
நாடியோர் பாமலர் சூடினேன் நாயனே!
நல்லருளால் இதை ஏற்பாய்.

கனலாய் எரிகிறது

கவிதை எழுகிறது; நெஞ்சக்
கனலாய் எரிகிறது

சுழலும் உலகின் கடலின் மடியில்
உழலும் ஏழை விழியில் வழியும்
துளியில், உலரும் உப்பைக் கண்டு
உளமும் அவர்க்காய் ... உருகும் பொழுது

கவிதை எழுகிறது; நெஞ்சக்
கனலாய் எரிகிறது

விஞ்சும் உணர்வுப் பூவாய் விரிய
வீசும் காற்றின் குளிரின் சொகுசில்
துஞ்சும்; உலகின் அழகைக் கண்டு
துடிக்கும் உள்ள உணர்வில் நாளும்

கவிதை எழுகிறது; நெஞ்சக்
கனலாய் எரிகிறது

சுரண்டல் வழியில் திரண்டபொருளை
சுகமாய் வாழ்வில் சுகிர்த்து வாழும்
வரண்ட உளத்தோர்; ஏழைவாழ்வை
வளமாய் ஆக்க வாழ்தல் கண்டு

கவிதை எழுகிறது; நெஞ்சக்
கனலாய் எரிகிறது

பணி செய்ய எழுந்திடு

அலையெறி கடலென
ஆர்த்தெழு முணர்வுகள்
அசைந்திடு மனத்திடை
புகுந்திடர் கொள எழும்
நிலையுறு வழிதனை
உலகிடை உணர்த்திட
நெகிழ்ந்திசை வழங்கிடும்
கலை; பெருங் கருவியாம்

அடர்தரு மர நிழல்
என கலை விரிகையில்
சுடர் மொழி தமிழ் மகள்
சுவை யொடு நெகிழ்ந்திட
இடர் இழி நிலை இருள்
பட ஒளி எழ வரும்
படர் கொடி எனக் கலை
வளர்ப்பதே பசுமையாம்

விழியெழில், விரிகதிர்
சுடர்மதி அலை கடல்
நெளி இடை அழகினை
எழுதிடல் முறைமையே
குழிவிழும் விழிகளாய்
உளல் பவர் நிலையினை
எழில் கொள இயம்புதல்
ஏற்ற நற் கலைகளே

விடு; விடு, இனி விழல்
வெறுமையின் உயிர்ப்பினில்
விசர்க்கவி புனைவதால்
துளியுமே பயனிலை
சுடுபடு மானதாய்
சுருண்டிட கொடுமைகள்
தொடுத்திடு, கவிமழை
பணி செய எழுந்திடு

எழுதுகோல் அழுகிறது

என்பெயர், எழுதுகோல்
என்முனையில் ஊறுவதெல்லாம்
வெறும்...டப்பா மை என்றா...?
தப்புக் கணக்கிட்டீர்

ஊஹூம்...கேளுங்கள்
பலிக்களத்திலே உயிர்விட்ட
பராக்கிரம சாலியின் உடலில் பாயும்
உதிரத்தை விடவும் உன்னதமானது

என்ன...? புரிகிறதா... உமக்கு!
இன்னும் கேள்
என் பொன்மேனியில் ஜனிக்கும்
ஒவ்வொரு பிரசவங்களும்
வெறும் சவங்களல்ல

அகிலத்தின் கண்
ஆக்ரோஸமாய்ப் பீறியெழும்
அணுகுண்டு...ஏவாயுதக்கணைகள்

இன்னும் புரிகிறதா...? உமக்கு

ஓ... என் பெயர் எழுதுகோல்....

என் தத்துவத்தை அறியவேண்டுமானால்
சரித்திரச் சுவடுகளை
ஒருக்கால் புரட்டிப்பார்

காலத்தின் கண்ணாடியாய்
உன் கண் முன் படம் விரியும்

என் அணுகுண்டுப் பீரங்கித்தாக்குதல்களால்
ஆட்டம் கண்டு அடிசாய்ந்த
நாடுகள் தான் எத்தனை...

சுதந்திர சூரிய ஒளிக்கதிர்கள்...
வடக்கிலும்...கிழக்கிலும்...
தெற்கு... மேற்கிலுமாய்... உதயம்பெற

அடக்குமுறை, அராஜக தர்பார்களின்
ஆதிக்க அனர்த்தங்கள்
சுடு காட்டின் கல்லறையாய்..
இன்னும்... இன்னும்...
எத்தனை....எத்தனையோ...

அப்பப்பா... இவைகள் என்
நினைவின் தரிசனங்கள்

புரிகிறாதா...? ஓ... நான்
இலட்சியத்தின் கதாநாயகன்
இன்று... எடுப்பார்கைப்பிள்ளையாக
மாறி விட்டேனா...?

அசுத்தக்கரங்கள்
என்மேனியைத் தழுவும்போது

அப்பாடா... நான் படும்வேதனை
அதனால்தான்... கெஞ்சிக்கேட்கிறேன்
என் புனிதத்து வத்தை
உங்கள் புழுதிக் கரங்கள்
தீண்டாமல் இருக்கட்டும்

இலட்சிய புருஷர்களே
என் சவாரித் தோழர்கள்
அவர்கள் ஆத்மார்த்த அரவணைப்பே
என்... ஆனந்தக் களிப்பு

அதனால்தான் கேட்கிறேன்
புழுதிக் கரங்களே! போய்விடுங்கள்

என்பெயர், எழுதுகோல்
என்முனையில் ஊறுவதெல்லாம்
வெறும்...டப்பா மை என்றா...?
தப்புக் கணக்கீட்டீர்
பலிக்களத்திலே உயிர்விட்ட
பராக்கிரம சாலியின் உதிரத்தை விடவும்
உன்னதமானது புரிகிறதா...? உமக்கு

வள்ளம் மிதக்குதுபார்

வள்ளம் மிதக்குதுபார்... கடலிலே
வள்ளம் மிதக்குது பார்...

மெள்ள இரைந்து மிகைத்திடும் பேரலை
மேவி சரித்து அழித்திடும் பாங்கினில்
உள்ளம் சிலிர்த்த சிலர்தனை ஏந்தியே
ஓராயிரத் தூயர் தாங்கும் நிலையினில்

வள்ளம் மிதக்குது பார்... கடலிலே
வள்ளம் மிதக்குது பார்...

கூறப்பாய் கட்டிக் குமரிப் பெண்போலவே
குங்குமம் இட்டுக் கொடும் மழை காற்றினில்
தாறாப்பச்சை உடன் சுக்கான் வலிப்பவர்
தன்மைக்கு ஏற்ப தள்ளாடித் தள்ளாடியே

வள்ளம் மிதக்குது பார்... கடலிலே
வள்ளம் மிதக்குது பார்...

பாரை, சுறா, பனை, சூரை, திருக்கைகள்
பாரை விழுங்கும் திமிங்கில ஆழியில்
ஈரலைக் கையில் பிடித்தவர் தாங்கியே
ஏலேலோ... என்று இலட்சிய நோக்கிலே

வள்ளம் மிதக்குது பார்... கடலிலே
வள்ளம் மிதக்குது பார்..

அப்பக்கார ஆச்சி

அப்பக்கார ஆச்சி
ஆடி ஆடி வருகிறா
செப்பமாக விற்று அதில்
சீவியமே நடத்துறா

இரவு நடுச் சாமவேளை
எழுந்து கோப்பி அருந்தியே
உரலும், கையுமாக நின்று
உழைக்க வழி காணுவா

அக்குத் தொக்கு இல்லா ஆச்சி
அந்தக் குடிசை மீதிலே
புக்குப் புக்கு என்று மோதும்
புகையில் வெந்து சாகுவா

சுட்ட அப்பம் பெட்டியிலே
கூடு ஏற அடுக்கியே
விற்பதற்காய் தலையிலேற்றி
வீதி வலம் சுற்றுவா

"அப்பம் இரிச்சியோ" என்ற
அந்தக் குரல் காதிலே
எப்போதும் வந்துமோதும்
எங்கள் பசிபோக்கிட

இந்த வயசில் இனியும் என்ன?
எவரும் கேட்டால் தருகுவார்
என்று சொன்னால் அவரைப்பார்த்து
எரி மலையாய்க் குமுறு வார்

பிச்சை பெற்று வாழும் வாழ்க்கை
கொச்சை என்று திட்டியே
எச்சரிக்கை செய்யும் ஆச்சி
இளைத்து அதோ வருகிறா...

அப்பக்கார ஆச்சி அதோ...
ஆடி ... ஆடி வருகிறா
செப்பமாக விற்று அதில்
சீவியமே நடத்துறா

காற்றே...! உன் சீற்றம் ஏனோ...?

காற்றே உன் சீற்றம் ஏனோ...?
கவலையினைத் தருகிறதே...?

அன்ன நடையாய்... ஆடிவரும் உன்னழகில்
என்ன சுகம்; ஆ... ஏகாந்த ராகம்தான்

அந்த சுகத்தில், ஆராரோ இசைபாடி...
தாலாட்டி மகிழ்வாய், தாயாக பணிசெய்வாய்

இப்படியாய் ... எங்கள் இதயத்தில் ஒன்றாகி
நண்பனாய் நின்று நடமாடி பின்னாலே
கோபித்துக் கொள்ளும் கொள்கை அது ஏனோ...?

காற்றே... உன் சீற்றம்
கவலையினைத் தருகிறதே

முன்னே... ஒரு நாளில்... முறைத்து முகம்மாற்றி
எம் முன்னே வந்தாய்; இதயத்தின் சுருதிகளை
முகாரிகளாய் மீட்டி முடுக்கிய உன் வீணையினை

எண்ணுகின்றபோதே... சீ... இதயம் வெடிக்கிறதே

காற்றே! உன் சீற்றம் கவலையினைத் தருகிறதே

அன்று...! நீ வந்த ஆக்ரோஸ சுவடுகளால்
இன்றும் எமக்குள்ளே எச்சரிக்கை செய்கிறதே

மூலைக்குள் மெல்ல முடங்கும் ஒரு பல்லியென
ஓலங்கள் போட்டு ஓடி ஒளிந்ததனை
மறந்து... தலைகீழாய் மாறியவர் நிலைகண்டா...?

காற்றே! நீ... உந்தன் கனதியினைக் கூட்டுகிறாய்
காற்றே! உன் சீற்றம் கவலையினைத் தருகிறதே

உண்மைதான் காற்றே! உந்தன் உறுத்தல்கள்
எம்மைப் பதம் பார்க்க எழுவதுவும் நியாயந்தான்

என்றாலும் காற்றே! ஈனசமூகத்தில்
நல்லவரும் சிலபேர்கள் நானிலத்தில் உள்ளனரே!

அதற்காகவேனும் ஆறுதலாய் நீ வந்து
இதம் ஊட்டுதற்காக எம்மிடையே வாராயோ?

ஆத்மீகம் என்ற அரும்பால், தேன், கற்கண்டு
பானம் குழைத்த பக்குவத்தை மறவர்கள்
காதுகளில் கொண்டு களிப் பூட்ட மாட்டாயா?

புல்வர்களாய் வாழ்வில் புதையுண்டோர் நெஞ்சில்
மெல்லப்புகுந்து மேன்மைகளைத் தூவுதற்காய்
மென் தென்றல் ஆகி இம் மேதினியில் வீசாயோ?

காற்றே! உன் சீற்றம் கவலையினைத் தருகிறதே

உலகியல் நாடகம்

இரவு என்ற இருட்திரை
மெல்ல... மெல்ல... விலகிச் சென்றதால்
காலை என்னும் கன்னிப் பெண்ணாள்
களிப் பெய்தி காட்சி தந்தனள்

எங்கும் நிசப்தம்... ஏதோ அமைதி
காகம் கரைந்தது; கோழிகள் கூவின
பகற் பொழுதின் விடிவை உணர்த்த
பறை சாற்றினவோ... நானும் எழுகிறேன்

கூதற் காற்று மெள்ள வந்தது
போர்த்திய நிலையில் வாப்பா... ஆங்கே
சாத்திய சிலையாய் சரிந்து கிடக்கிறார்
பணிகள் செய்யப் பயணம் செல்வோர்
பதை பதைத்தே எழுந்து விரைகிறார்

காலைக் கதிரோன் கண்ணை விழித்து
மேலே... வானில் மிதந்து ஊர்கிறான்
பகல் என்ற இதழ் விரிந்தது
பாதைதோறும் உசாராயின

பசியைப்போக்க உழைப்பதற்கா...?
காறு வண்டிகள் உறுமிச் சென்றன
இருளில் எழுந்தவர் பகலின் முனைப்பில்
ஒளியை நோக்கி ஓடுதல் எதற்கு?

அரைஞாண் வயிற்றை அடைத்திடத்தானோ?
பகல் முற்றி... மாலை மலர்ந்து...
உலகியல் நாடகம் ஊர்ந்து சென்றதால்
காலைக் கதிரோன் மேற்கே நகர்ந்தான்

காலைக் கதிரோன் கடமை முடித்து
மேற்கு வானில் மெள்ள நகர்ந்ததால்
இரவு என்ற திரை விழுந்தது
ஓடிய மனிதர் ஆடிய நிலையில்
மீண்டும் பாயில் உறக்கம் கொள்கிறார்

பகலின் காட்சிகள் நிழற்படம்போல
கண்கள் முன்னே கனவாய் விரிந்தன
கனவில் லயித்து விழித்தவர் எதையோ
இழந்துவாடிச் சோர்வதுபோல

மீண்டும் எழுகிறார்... நானும் எழுகிறேன்
உலகை நோக்கி உற்றுப் பார்க்கிறேன்
பழைய காட்சி ... பழையகோலம்
உலகியல் நாடகம் ஊர்தல் காண்கிறேன்

அழாதே என் கண்ணே...!

என்னருமைத்தாயகமே! இதயவானில்...
எழில் கொஞ்சும் சாய்ந்த மருதே அம்மா
உன்னழகுக் கோலந்தான் எங்கே போச்சு
உணர்வெல்லாம் துடிக்குதடி புயலாய் மாறி
கொன்றழிக்க வந்தானோ? கோரக்காற்று
கொடுமையினை எண்ணிடவே நெஞ்சமெல்லாம்
கண்ணீராய் மாறுதடி! கண்ணே! உன்றன்
கவின் மிகு கோலத்தை எப்போ காண்பேன்?

வானத்து முழு நிலவாய் வனப்பை ஊட்டி
வார்த்தையினால் வடிக்கவொணா குமரிப் பெண்போல்
சீனத்துப்பட்டாடை அணிந்து நின்றே
சிரித்தாயே, எனைப்பார்த்து அந்த நாளைக்
காணத்தான் துடிக்கின்றேன் கருணையுள்ள
கலை யொளிரும் சீதேவித்தாயே அன்பே!
போனாயே; இன்று மிகப் பொலி விழந்து
போனதுயர் கதை சொல்ல மாளாதம்மா

முற்றி வளர் தென்னை, பலா, வாழை மற்றும்
முறுவல்கொள் மா, தோடை; மலர்த்தோட்டங்கள்
குற்றயிராய்ப் போன பல கட்டங்கள்
குமரே! உன்வனப்புக்கு அழகு ஊட்டும்
சொத்தாக நின்றதடி சோபை குன்றி
"சோ" வென்ற புயலுக்கு ஆட்டங்கண்டு
முற்றாக வீழ்ந்ததனால் முகமே மாறி
முடப்பெண்ணாய் ஆனாயே! என்னசெய்வேன்

சத்தியமாய் உன் கண்ணீர் துடைப்பதற்கு
சந்ததியாய் இளைஞர் நாம் உள்ளோம் இங்கே
நித்திரையில் நினைவெல்லாம் நீயே வந்து
நிழலாடுகின்றாயே அன்புத்தாயே!
கத்தாதே; கதறாதே, கவலைவேண்டாம்
காசினியில் உன் னெழிலை மீட்டெடுக்க
இக்கணமே எழுந்திட்டோம் இனியும் என்ன?
எனைப் பார்த்து சிரி தாயே! அழுகை வேண்டாம்

அண்ணலார் வாழ்வில் அரிய சம்பவம்

அண்ணல் நபியும் அவர்தம் தோழர்கள்
அமர்ந்து இருந்த அவையின் முன்னே
என்றும்போல் விருந்தாளிகள் அன்றும்
எதிர் கொண்டனர்; ஏற்றே தோழர்கள்
ஒவ்வொருபேராய் இல்லம் ஏகினர்
ஒருத்தர் மட்டும் மிஞ்சிக் கொண்டார்

மிஞ்சிய நபரோ மிகவும் கெட்டவர்
மிருகம் போன்ற தன்மை பெற்றவர்

அன்னார் தமையே அண்ணல் நபிகள்
அன்போ டில்லம் அழைத்துச் சென்றார்

வந்தவர் தம்மை வாகாய் அண்மிய
வள்ளல் நபிகள் வளமாய் தன்னுடன்

விருந்து புகட்டி விருப்பும் ஈந்து
விடியும் மட்டும் தூங்குக, என்றார்

தூங்கச் சென்றவர் தோசி ஆகையால்
தூய நபிக்குத் தொல்லை கொடுக்கவே

எண்ணி விரிப்பில் மலத்தைக் கழித்தே
இரவுப் பொழுதில் எழுந்து போயினார்

எழுந்து சென்றவர், இடையில் கைவாள்
எடுக்க மறந்ததால் நபியின் வீட்டை
அண்மி, ஒதுங்கி அச்சத்தால் அவர்
அங்கு நடந்த அதிசயம் காண்கிறார்

உலகைத் திருத்த உதித்த உத்தமர்
உம்மி நபியோ விருந்தாளிக்கு
என்ன நடந்ததோ...? என்ற கவலையால்
ஏக்கத்துடனே அங்கு கிடந்த

அசுத்தம் தன்னை அற்புதக்கரங்களால்
அழகுபடுத்த தோழர் தடுத்தும்
என்றன் விருந்தினர், எது நேர்ந்் திடினும்
என்பணி என்றே ஏற்றுச் செய்ததை

கண்ட அக் கயவன் கண்கள் கலங்க
கருணை நபியைக் கட்டித்தழுவி

உண்மையில், உங்கள் உத்தமச் செயலால்
உள்ளம் திறந்தது; என்றே செப்பி
இணையில்லாத ஈமானோடு
இணைந்து இசுலாம் ஏற்றுக்கொண்டார்

குயில் விடு தூது

குயிலே... ஓ... கூவாயோ...? இக்
கொடுமையைக் கூறாயோ...? நீ!

அடர்தருசோலை உள்ளே அழகுறவீற்றிருந்து
இடர் இலா ஏகாந்தத்தில் இன்பமாய் இசைமுழக்கும்

குயிலே... ஓ... கூவாயோ...? இக்
கொடுமையைக் கூறாயோ...? நீ

நானோர் மனிதன் நானிலத்தில் பிறந்தவன்தான்
என்னைப்போல் இங்கு ஏராளம் பேர் உள்ளார்

என்றாலும், எந்தன் இதயத் தடாகத்துள்
சீறி யெழும்பும் சினப்புக்கள் அத்தனையும்

கூறிக் குதற இக்குவலயத்தில் ஆளில்லை; அதனால்...
உன்னை அழைத்தேன் ஓ... ஒருவார்த்தை கேட்பாயா?
சின்னக்குயிலிலே; என் சினத்தை நீ தீர்ப்பாயா?

அதோ... தெரிகிறதே... அதுதான் என் இல்லம்
புச்சி மனை, அதனுள் புகுந்தால் இருள்
உச்சி வெயில் சுள்ளாய் உறைக்கத்துயில் கொள்ளும்
ஏழைப் பிறவி; என்றாலும், என் இதயம் இருளல்ல

ஜாதிகள் இரண்டன்றி வேறில்லை என்று
நீதிகள் பல நெறி நின்று ஓதியவர்
பாதையில் என்னைப் பார்க்காது செல்கின்றார்

ஏனென்றால்... நானோர் ஏழை நலிவுற்று நிற்கின்றேன்
அக்கணம்... என்னை ஒருக்கால் எடைபோட்டுப்பார்க்கின்றேன்

எனக்கும்... அவர்க்கும்... அவர்க்கும் பிறர்க்குமாய்
என்ன வேற்றுமை இறைவன் வகுத்தான்

அற்பத்துளியால் ஆனவர் நாங்கள்
அனைவர் உருவின் அச்சும் ஒன்றே

சிந்தும் ரத்தம் சிவப்புத்தானே
வெள்ளை கறுப்பு வேற்றுமை இலையே

பகுத் தறிவின் பரிசை ஏந்தி
பக்குவமாக வந்தவர் நாங்கள்

எங்களுக்குள்ளே எத்தனை பூசல்
எங்களுக்குள்ளே எத்தனை வேற்றுமை

குலம், இனம், நிறம், மொழி, பணம், பதவி, படாடோபம்
கத்திச் சண்டை கழுத்தறுப்பு, குத்துக்கரணம், கோடு ஏறுதல்

இப்படியாகச் சொல்லப்போனால் இதயம் எரி மலையாய்
மாறும்

உங்கள் உள்ளும் ஓட்டை உடைசல் உள்ளதாமோ?
உரைப்பாய் குயிலே!

சத்தியமாக இல்வே, இல்லை, சங்கதி அதனை நாமும்
அறிவோம்

எங்கும் சென்று இரையைத் தேடி பொங்கும் மகிழ்வால்
புவியில் வாழ்கிறீர்

போட்டியில்லை, பொறாமை இல்லை, வாட்டும் கொடிய
வேற்றுமை இல்லை வாழ்வில் எந்த வருத்தமும் இல்லை

அறிவேன் குயிலே; அதனால்தானே
குறியாய் உன்னைக் கூப்பிட்டழைத்தேன்

எந்தன் தூதை எங்கள் நாட்டின்
மனிதர் வாழும் இடங்களில் சென்று

சிந்தை குளிர சிறப்பாய்க்கூறு
உங்கள் வாழ்வின் ஒற்றுமைதன்னை
ஊனம் கொண்டோர் உணரக்கூவு

எல்லோரும் இந்நாட்டு மன்னர்
என்ற தத்துவம் எடுத்துக்கூறு

புச்சிக் குடிலில் புழுவாய் ஒருவன்
புலம்பிய கதையைப் புகட்டுக குயிலே

உந்தன் தூதால் எங்கள் நாடு
உணர்ச்சி பெற்று ஒளிரக்கூவு

அந்த நாட்கள்

வெண்வான். . . . கருமுகில் போர்வைக்குள்
போர்த்திய அந்த நாட்கள்

இன்னும். . . .இன்னும். . .என் மன மாளிகையின்
உணர்ச்சிச் சாளரத்தை உசுப்பிக் கொண்டேயிருக்கிறது.

•

கொளுந்து விட்டெரியும்தன்
பொன்மயக் கதிர்களை
மெல்ல. . . மெல்ல. . .உடற்கூட்டிற்குள்

ஒளித்துக் கொண்டானோ? சூரிய பகவான்

எங்கும் இருள்மயமான சோகச்சுவடுகள்
கருமுகில்கள். . . தன் கண்றாவிக்காற்றை
எங்கும் சுழலவிட

இடி, மின்னல், சூறாவளியின்
இடி பாடுகளுக் கிடையில்
சிதறுண்ட சிறுதூசுகளாய். . . மானிட ஜென்மங்கள்
அங்குமிங்கும். . . அநாதரவாய். . . .

ஆ. . . .அந்த நாட்கள்

இன்னும். . .இன்னும் என் மன மாளிகையின்
உணர்ச்சிச் சாளரத்தை உசுப்பிக் கொண்டேயிருக்கிறது.

ஈழ வான். . . வெண் பரப்பிலா. . . ?
இந்த முகில்கள். . . .

கருமைப் போர்வைக்குள்
கவிந்து கொண்டது

பசுமை மழையில் நனையும் எங்கள் பயிர்களா?
சிவப்பு மழையில் சிதறுண்டு போயின. . ?

இந்த முகில்கள். . . .
இன்னும். . . .இன்னும். . . .
எங்கள் வானில். . . . எழவிடுவதா?

ஓ. . . .அந்த நாட்கள்
கொடுமை கோலோச்சி
ஜுவால் புயல் கிளப்பிய
ஜுலை பத்தொன்பது எண்பத்து மூன்று

ஜுரமாய். . . . இன்னும். . . .இன்னும். . .

என் மன மாளிகையின்
உணர்ச்சிச் சாளரத்தை
உசுப்பிக் கொண்டேயிருக்கிறது.

" ஜூலைக்கலவரம்பற்றிய
ஞாபகார்த்தக் கவிதை "

அறிவின் நிழலில். . .

"அறிவின் பட்டணம் அகமது நபிகள்
அதன் நுழைவாயில் அலிரலி அன்ஹு"
வழியில் வந்தோர் வையம் மீதில்
எழிலாய் மின்னி இறையடி சேர்ந்தார்.

அறிவீர்; அறிவில் ஆழ்ந்த முங்கிய
பெரியோர்; அன்னார் புரிந்த சேவை
குறியாய் நின்று குவலயமோங்கப்
பிறையாய் வந்து பெருமிதங் கொள்ளும்
அந்தத் தகையோர் அறிவின் நிழலில்
ஆற்றிய பணிகள் அகங் கொள்வீரே

ஆதி உலகப் படத்தை யாத்தவர்
"அல் இத்ரீஸி" அறிஞர் ஆவார்
வைத்திய மேதை, "இப்னுசீனா"
வரலாற்றறிஞர், "இப்னு ஹல்தூன்"
கணிதமேதை, வானசாஸ்திரி
மருத்துவ வல்லுனர், "அல்பிரோனி"
இப்படியாக இன்னும். . . . இன்னும்
எத்தனை பேர்கள் இயம்பக்கேளீர்

"ஜாபீத் இப்னு ஹையான்" என்பவர்
ரஸவாத நிபுணர் ஆவார்
இறக்கை கட்டி விண்ணில் மிதந்தவர்
"அப்பாஸ் பின் பிர்னாஸ்" என்பாரே

சோதிட நிபுணர் "அல்பதனீ"
தத்துவ மேதை, " இப்னுருஸ்து"
கண்ணொளி ஆய்வலர், "இப்னுல்ஹைதம்"

ரஸாயன கலைக்குப் புத்துயிர் தந்தவர்
புத்தியில் உயர்ந்த "ஜில் தக்கீயாம்"

மயக்கம் ஊட்டும் மருந்தாம் குளோறபோம்
அறிஞர் "அபுல் காசிம்" கண்டதே

அன்புச்சோதரா! இன்னும். . . இன்னும்
அறிய வேண்டுமா? அறியக்கேண்மின்

நவரத்தின ஆராய்ச்சி நூலை
நலமாய்த் தந்தார் "அல்பரூனி"
தாவர வர்க்க ஆய்வு நூலை
தந்தார் "அல் பிய்த்தர்" ஆவார்

இம்மட்டா? எம்முன்னோர் மண்ணில்
விட்டுச் சென்ற சாதனை பலவே
உழவுத் தொழிலில் உயர்வும் பெற்றனர்
வணிகத் தொழிலில் வளமும் கண்டனர்.

வாய்க்காலமைத்தல், பாலம் கட்டல்
நீர்த்தேக்கங்கள் நிர்மாணித்தல்
சகடம், குழாய், சக்கரம் கொண்டு
நீரிறைக்கும் யந்திரம் கண்டனர்.

எல்லாத்துறையில் ஏற்றம் பெற்றனர்
எம்முன்னோர்கள் என்பதில் எவர்க்கும்
ஐயம் இல்லை ஆனால். . . இன்று
அறிவுத்துறையில் ஆட்டம் கண்டு
கண்ணேயிருந்தும் கண்ணில் இரண்டு
புண்கள் ஆகிப் புலம்புதல் கண்டோம்.

என்னே! என்னே. . . ! இன்னும் இந்த
இழி நிலைக்கு ஏனோ ஆனோம்?
மாற்றார் எம்மை மடையர் என்ற
நாற்றம் ஓட்ட நாமின்றெழுவோம்
"அறிவின் நிழலில்" அகிலம் வெல்லும்
குறியில் நின்று குலத்தைக் காப்போம்.

உலகை நோக்கிய ஓர்...
ஆத்மாவின் சலனம்

உலகம். . . சேச்சே. . . இதன் பெயர் உலகமா?
கலகம் நிறைந்த கண்றாவியாச்சே!

எங்கு நோக்கினும் எழுவது முகாரியே
ஏகாந்தத்திற் கிடமே இல்லையே

ஆசியா. . . அங்கே! அமளிதுமளிகள்
ஆபிரிக்கா அங்கும் நிறவெறி
ஐரோப்பாவில். . . அமெரிக்காவில். . .
அவுஸ்திரேலியா. . . . அனைத்து திக்கிலும்

அனர்த்தம் கனத்து அழிவில் முங்கிய

உலகம். . . சேச்சே. . .இதன் பெயர் உலகமா?

உளுத்துப் போன ஊத்தைக்கிடங்காய்
உலகம் இன்று உருப்பெற்றதேன்?

மானிடம் இன்று மதிப்பேயற்று
செல்லாக் காசாய் சீரழிந்தது

பட்டம். . . அதற்காய் படுகொலை நிகழும்
பதவி மோகம் கண்ணை மறைக்கும்
அடுத்தவர் பொருளை அபகரித்திட
அற்பர் கூட்டம் ஆலாய்ப் பறக்கும்

சின்னமீனை விழுங்கத் துணியும்
திமிங்கிலங்கள் வாலை ஆட்டும்
உலகம். . . சேச்சே . . . இதன் பெயர் உலகமா?

பொஸ்னியாவில். . . .இனக்கொலைகள்
ஆப்கானிஸ்தான் போரின் அலைகள்
மத்திய கிழக்கில் யுத்தபேரிகை

இலங்கை, இந்தியா, காஸ்மீரோடு
சோகம் நிறைந்த சோமாலியாவின்
கதைகள் கேட்டால் கண்ணீர் பெருகும்

புழுவாய் . . . அங்கே மனிதர் நெழிவர்
பூரான் போன்ற உருவில் அலைவர்

வறுமைக் கோட்டில் வளமே இன்றி
வாடுவோர்கள் உடலின் ஊடே
குண்டுகள் பாய்ந்து குடலைத் தின்னும்
கொலை வெறியர் குதூகலிப்பர்

புரட்சியாம். . . ஏதோ புதுயுகம் காணவாம்
குழுக்களாய்ச் சேர்ந்து கொலைகள் செய்யும்
இழிஞர் எவரையும் எண்ணிப் பாரார்

அப்பாவிகளை அநாவசியமாய்
அறுத்தும் "டயரில்" போட்டும் எரிப்பர்.

தந்தையை இழந்த தனயர்கள் எத்தனை?
தாயை இழந்த சேய்கள் எத்தனை?

கணவனை இழந்த மனைவிகள் எத்தனை?
மனைவியை இழந்த கணவர்கள் எத்தனை?

எண்ணிப் பார்க்க எரிமலையாகி
இதயம் வெடித்துச் சிதறிப்போகும்

உலகம். . . சேச்சே. . . இதன் பெயர் உலகமா?

நாட்டில் வாழ்ந்த மனிதன் இன்று
காட்டிலும் கை வரிசையைக் காட்டுவான்

மனிதனை மனிதன் கொல்லுதற்காக
மதியைக் கொன்றே பயிற்சியும் பெறுவான்

சுதந்திரமாக சுற்றித் திரிந்த
விலங்குக்கு கூட இவனால் தொல்லை தான்

மாட்டுச்சந்துடன் மனிதச்சந்தும்
சந்தையில் விற்கும் காலமும் வரலாம்

விஞ்ஞானத்தில் விந்தை புரிந்ததாய்
விண்வெளி ஏகிக் கால் பதித்தாய்

அற்புதம் பேசும் அறிவிலியாளர்
அகிலம் வாழ என்ன செய்தனர்

மண்ணின் உள்ளே கண்ணிகள் வெடிக்கவும்
மாற்றான் மனையைக் குண்டுதுழைக்கவும்

ஏவுகணைகள். . . அணு ஆ. . ராய்ச்சி
என்றிவ்வாறாய் எத்தனை ஆய்வுகள்

மனிதனை மனிதன் கொன்று குவிக்கும்
மருந்தாய் அவைகள் மாறி விட்டதே

உலகம். . . சேச்சே. . .இதன் பெயர் உலகமா?

இசுலாம். . . எங்கே. . . ? கிறிஸ்தவம் எங்கே?
சைவம் எங்கே? பௌத்தம் எங்கே?

எல்லா மதங்களும் இயம்புதல் நன்றே

எல்லா வழியும் ஏற்றம் பெற்றதே

மதங்களை விட்டு மதியைக் கொன்றதால்
மனிதன் இன்று மடிந்து போகிறான்

இதனைத் தடுக்க எவரும் இல்லை
இதனை வளர்க்கவே எவரும் துணிகிறார்

இப்படி உலகம் இருண்டு போனால்
எப்படி மனிதர் ஏற்றம் பெறலாம்!

உருப்படியாக ஏதும் செய்ய
உலக மாந்தரே! ஒன்று கூடுவீர்

வெறுப்புகள் விட்டு, வேதாந்தங்கள்
விதைப்பதை விட்டு மானுட சமூகம்

அனைவரும் ஒன்றி சகோதரத்துவ
அணியில் நின்று ஆத்மீகத்தில்
புரட்சி ஒன்று பூத்திட வேண்டும்
புதுயுகம் காணப் புறப்பட வேண்டும்

இன்றேல். . .

அழிவின் விளிம்பில் ஆகும் உலகில்
அமைதி காண்பது ஆபத்தானதே!

உலகம் சேச்சே. . . . இதன் பெயர் உலகமா?

வாழ்க்கைப் படகு

நீளும் ஞாலக் கோலக் கடலில்
சூழும் அலையின் சுழியின் இடையில்
மாளும் புழுவாய் மடியும் நிலையில்
வாழ்க்கைப் படகு நகர்கிறது; என்
வாழ்வின் காலம் கழிகிறது

இலையின் நுனியில் தொங்கும் பனியாய்
தொலையும் காலக் கனவுக் கீற்றில்
மலையா, மோட்சப் பாதை நோக்கிய
வாழ்க்கைப் படகு நகர்கிறது; என்
வாழ்வின் காலம் கழிகிறது

பொதுமை என்ற சுக்கானேந்திப்
புதுமை பூத்துப் பொலிய நாளும்
மிடிமை காணா விடிவை அடைய
வாழ்க்கைப் படகு நகர்கிறது; என்
வாழ்வின் காலம் கழிகிறது

கசியும் நயனக் கருமேகஞ் சூழ்
கவலும் நெஞ்சக் கனலுள்
விதியின் எல்லை விளைவு காண
வாழ்க்கைப் படகு நகர்கிறது; என்
வாழ்வின் காலம் கழிகிறது

சமூக உடன்பாடும். . .
தனித்த வாழ்க்கையும்

ஊரோடு ஒத்து வாழ்;
உத்தமர்கள் சொல்கின்றார்

ஊரோடு ஒத்தால் தான்
உண்மையிலே நாமிங்கே

பேரோடு வாழ்ந்திடலாம்
பெரியோர்கள் கூற்றுக்கு

தாளங்கள் போட்டு
தம்பட்ட மாடுகிற
காளான்கள்; இங்கே
கனபேர்கள் உள்ளார்கள்

அன்று. . . ஓர் நாள். . .
அப்பட்ட மாய் நடந்த
சங்கதி ஒன்று. . .
சபை முன்னே வந்ததனால்

உண்மை அறிந்தும். . .
ஊரோடு ஒத்து நின்று
கனவான் மகனை
கண்ணியவா னாக்கி வைத்து

அப்பாவி ஒருவன் மேல்
அபாண்டப் பழி சுமத்தி

கன்னி. . . அவளின். . .
கற்பைப் பறித்தவன்
இவனென்று சொல்லி. . .
இழுத்துப் பலரறிய

கல்யாணம் செய்வித்த
கண்றாவிச் சமூகத்தை

திட்டித் தொலைத்த
தீரமிக்க ஓரிளைஞன்
பட்ட அடியால். . . .
பதை பதைக்க மாண்டதனை

மூடி மறைத்த முட்டாள் சமூகத்தை
நேசிக்க என்ன
நியாயம் இருக்கிறது?

சுயநலமும், சூழ்ச்சிகளும்
சுரண்டல் வழிமுறையும்
கழுத்தறுப்புக் கொள்ளை
காம வெறி ஆடுகிற

ஊரோடு ஒன்றித்து
உண்மையிலே வாழ்ந்தால்
பேரோடு வாழலாம்
என்று பிதற்றும்

உத்தமர்காள். . .உங்கள்
உபதேசம் உண்மையிலே

ஏற்கத்தான் வேண்டும்
என்றால். . . இச்சமூகம்

சீரோடா. . . வாழ்கிறது. . . ?
சிந்தையிலே கை வைத்து
சொல்லுங்கள்; நேர்மையெனில்
சேர்வோம்; இலையென்றால். . .

விட்டு சமூகத்தை வெறுத்து
தனிமையிலே
வாழ்வது தான் ஏற்ற
வழியாகும் உணர்வீரே. . . .!

ஏனிந்த இடமாற்றம். . . ?

காசிமே! கேட்டாயா? கவலை தரும் சேதி
இசுமாயில் வாத்தியார்க்கு இடமாற்றம் அறியாயோ?

என்ன கதை, சீச்சீ. . . இடிவிழுந்த தாற்போல
இசுமாயில் வாத்தியார்க்கு இடமாற்றம் வந்திருக்கோ?

உண்மைதான் காசீம்; உத்தரவு "நோட்டீசு"
பிறப்பித்து உள்ளார்கள் பெரிய இடத்திருந்து

காட்டுக்குள் எங்கோ கடமை புரிகவென
"நோட்டீசு" அனுப்பியுளார் நொண்டிக் கனவான்கள்

இருபது வருஷங்கள் இந்தக் கிராமத்தில்
ஒரு குறையும் வையாது ஒழுங்காக வாழ்ந்தவர்க்கா
இந்த இடமாற்றம் எதற்காகச் செய்தார்கள்?

சின்னஞ்சிறுவர்கள் சிந்தும் மழைநீரில்
கன்னம் நனையக் கல்வி தனைக் கற்றதனைப்
பார்த்த ஐயாவோ. . .பதறித் துடித்தெழுந்து

உரிய இடம் சென்று, ஒழுங்கான இருமாடிக்
கட்டடம் கொணர்ந்து கல்விப்பால் ஊட்டுதற்காய்ப்

பட்டதாரி ஆசிரியர்கள், பல்கலைவேந்தர்கள்
எல்லாம் நியமித்து எமக்குள்ளே தங்கமென
இருந்த ஐயாக்கா? இந்த இடமாற்றம்?

இருளுக்குள் வாழ்ந்த எம் சிறுவர் சிறுமியரை
அறிவுத்தேன் ஊட்டி, ஆசிரியர், டொக்டர்களாய்,
பொறிநுட்ப வல்லுனராய்ப் பொக்கிஸத்தின் காவலராய். .
வருவதற்கு ஏற்ற வழிகாட்டியாய் அமைந்த

குருவுக்கா? இந்தக் கொடுமையினைச் செய்தார்கள்
கல்யாணம், மரணம், கலைவிழா, கத்னாக்கள்
எல்லா நிகழ்ச்சிகட்கும் இவர் வந்து முன்னின்று
செய்யவில்லை என்றால் . . . சிறப்பாக அவை நிகழா.

சண்டைகள், பித்னாக்கள், சமுதாய இடர்பாட்டைக்
கண்டால். . . உடன் சென்று கவனித்து, அதைத் தீர்த்து

வைப்பதிலும் மன்னவராய் விளங்கிய அச் செம்மலுக்கா?
இந்த இடமாற்றம்; ஏனிதனைச் செய்தார்கள்?

உண்மை புரிகிறது; ஓ. . . இதனைச் செய்வதற்கு
பின்புறத்தால் சில பேர்கள் பேயாய் அலைகிறது.

ஊருக்குள் உள்ள ஓநாய், நரி, கரடி
செய்கின்ற அந்தச் சீரழிந்த ஊழல்களைச்
சாவுமணியடித்து சந்தூக்கில் வைத்திடுவார்
எனப் பயந்தே. . . .
சமுதாய மேம்பாட்டைச் சற்றேனும் அறியாத
சுயநலப் பித்தர்கள் சூழ்ச்சி இதைச் செய்தனரோ?

ஏனிந்த இடமாற்றம்? எதற்காகச் செய்தார்கள்?

நல்லவர்க்கு இந்த நானிலத்தில் இடமிலையோ?
புல்லர்க்கும் பொல்லாப் போக்கிரிக்கும் தான் இடமோ?

அல்லா அறிய அநியாயக்காரர்கள்
பொல்லாங்கு ஒரு நாளில். . .
புகையத் தான் போகிறது

ஏனிந்த இடமாற்றம். . . எதற்காகச் செய்தார்கள்?

பசுமை கான வாருங்கள்

எங்கள் நாடு இலங்கை என்று
இசையமைத்துப் பாடு
பொங்கு மொளி ரத்தினங்கள்
புதையல் கொண்ட வீடு
மாவலியாள், மங்கை மலர்க்
கரமசைத்து நிற்பாள்
தேவை வேண்டுவோர்க்கு அவள்
தினம் அருள்பா லிப்பாள்
மாதுறு ஓயா மகிழ்ச்சிக்
கீதம் பாடி நெளிவாள்
தீதறுக்கும் பாதை காட்டித்
திங்களென ஒளிர்வாள்
சலசலக்கும் ஆறு, மலை
வாவி, குள, ஏரிகள்
கலகலக்கும் மான், மயில்கள்
கலை விழா நடாத்துமே
பொன் கொழிக்கும் பூமி பார்த்துப்
புன்முறுவல் பூத்திட
புன்மை கொண்ட நெஞ்சினனாய்ப்
போதல் என்ன ஞாயமோ?
அடுத்த நாட்டார்க் கன்னமீந்த
அழகு மாதா ஈழமே
எடுத்ததற்கெல்லாம் இரந்து
ஏனோ இன்று போகிறாள்?
ஈழமென்ற அன்னை அவள்
ஈன்ற மக்கள் நாமே
தோழமை கொண்டாடி நின்றால்
தொல்லை ஓடிப் போமே
அன்பினோடு ஒற்றுமையாய். . .
அணி திரண்டு இன்னலை
வென்றெடுக்க பசுமை நோக்கி
விரைவோம், வாரும் தோழர்காள். . . .

வழிப்போக்கனும், கூலியாளும்

தொழுவதனால் தொல்லைகள் தொலைந்துபோகும்
தூயனருள் நிழலாகத் தொடருமென்ற
வழுவில்லா ஈமானில் வாழ்ந்த முன்னோர்
வரலாற்றில் ஓரேடு திறக்கக் காணீர்
எழில் கொஞ்சும் கூபாவில் எல்லோர் நெஞ்சில்
இடம் கொண்ட கூலியாள் ஒருவர் வாழ்ந்தார்
பிழைப்புக்காய் மாற்றார்தம் காசு, பண்டம்
பிசகாது சேர்ப்பதிலே தொழிலாய்க் கொண்டார்

இவ்வாறு மாற்றாரின் பொருளை ஏந்தி
இடத்திற்கிடம் சென்று மீளும் போது
பவ்வியமாய் ஒரு மனிதர் வந்து நின்று
பகர்கின்றார், எங்கே! நீர்போவதென்று?
அவ்விடமா? அங்கேதான் நானும் செல்வேன்
அடியேனுக்கியலாதுன் கழுதை மீது
செவ்வையாய் ஏற்றிச் செல், ஒரு தீனாரைச்
சேர்க்கின்றேன் எனக் கூற ஏற்றுக் கொண்டார்.

இருவருமே வீதியிலே வந்த போது
இருபாதை தென்படவே; ஏறிக்கொண்ட
நபர் கேட்டார்; எப்பாதை செல்வதென்று?
நாளும் நான் செல்கின்ற பாதை செல்வோம்
எனக்கூற, வந்தவர், அதை மறுத்து
இலகுவழி அதனூடே செல்வோம் என்று
இயம்பியதைக் கேட்ட அக்கூலியாளும்
ஏற்றே அப்பாதை வழி தொடரலானார்

சென்ற அப்பாதையுமோ முடிந்து போக
சிதைவுற்ற பிணவாடைக்காட்டின் முன்னே
கொன்றிடுவேன்; எனக்கூறி குதித்துவந்து
கொடுவாளால் கூலியினை நெருங்கும் பேறு
அன்பரே! கொல்லாதே! அனைத்தும் ஈவேன்
அடியேனை விட்டிடுக! கெஞ்சிக்கேட்டும்
பன்றியினை ஒத்த அப்பாதகன் தன்
பணியினை முடித்திடவே நெருங்கி வந்தான்

என்னுயிர் போவதற்குள் இரண்டு "றகஅத்"
இறையோனைத் தொழுவதற்கு இடம்தாவென்று
மன்றாடினார்; அந்த இரங்கல் கேட்டு
மதியீனன் ஏளனமாய்ச் சொன்னான்
முன்சென்ற இப்பிணங்கள் யாவும் உன்றன்
முறையீடு கேட்டுத்தான் பிணமாய்ப் போச்சு
உன்னாலே ஆவதென்ன? ஒரு நொடிக்குள்
உனது உயிர் பிரிந்து விடும் தொழுக என்றான்.

தொழுவதற் காயத்தமானார் ஏழை
தூய "அல்- பாத்திஹா" சூறா ஓதி
அழுதுமே மறு சூறா ஓதுதற்கு
அதை மறந்து நிற்கையிலே திடீராய்வந்த
திக்கற்றவர் அவனை அழைக்கும் பொழுது
திராணியாய் பதில் தருவோன் யார்தானென்ற
"அம்மன் யஜீபுல் முள் தர்ற இதா அதாஹு"
ஆயத்து ஓதியே அழுது நின்றார்

பின்னாலே கொடுவாளை ஏந்தி நின்று
பேய் போல அதட்டிய அக் கொடியோனவன்
முன்னாலே ஒளி வீசும் தொப்பியோடு
முன்னோக்கி வந்த ஒரு மனிதர் ஆங்கே
தன்னிடமே வைத்திருந்த அம்பால் அந்தத்
தறுதலையைக் கொன்றுவிட சருகாய்ச்சாய்ந்து
மண்மீது வீழ்ந்த அதே இடத்தில் எரி
மலையாகத் தீப்பிழம்பு தோன்றிற்றங்கே

இத்தகைய காட்சியினைக் கண்ட ஏழை
இறையோனைத்துதி செய்து "ஸஜ்தா" செய்து
சத்தியமாய் நீங்கள் யார்? என்று மிக்க
சந்தோஸத்தால் கேட்க, அன்னார் சொன்னார்
"அம்மன் யஜீபுல் முள்தர்ற இதா அதாஹு"
ஆயத்தின் அடிமை நான் பயமே வேண்டாம்"
சென்றிடுக! எனக்கூறி மறைந்து போனார்
சீக்கிரமே கூலியும் தன்பணி தொடர்ந்தார்.

இறுதி ஆசை

அப்பா இறந்து அரை ஆண்டு நினைவாக
இப்பா. . .எழுகிறது, என்னெஞ்சில் – அப்போது
சொன்னார் ஒரு வார்த்தை சோதிப்பிளம்பாக
என்னை எரிக்கிறதே. . . இன்று

மாடாயுழைத்து மரியாதையாய் வளர்த்து
ஓடாகிப் போன உதட்டினிலே – வாடா
மலராக வந்த வார்த்தை அது வந்து
புலர்கிறதே என்னுள் புதைந்து

தங்கை அவளின் தலைகோதி என்னிடத்தே
சங்கையாய்க் கார் என்று சாய்ந்தார் – அங்கே
தந்த உறுதி தலைகீழாய் தடம் புரள
நொந்து துடிக்கின்றேன் நான்

முப்பது வயசு மூப்பெய்தி என் தங்கை
இப்போதும் உள்ளாள் என் செய்வேன் – கப்பல்
விலையேறி மாப்பிள்ளை ஏலம் நடப்பதனால். . .
சிலையாகி நிற்கின்றேன் சிதைந்து

வாக்கை நிறைவேற்றா வருத்தம் அதற்கீடாய்
நாக்கை அறுக்கத்தான் நாடுகிறேன் – வேட்கை
நிறைவேற ஏதும் நேர் உண்டேல். . . உலகோரே!
முறையொன்று சொல்க முனைந்து

சுனாமியின் பின்னர்

மூன்றெழுத்திற்குள். . . .
முகிழ்த்ததோர் பேரிடி

காலை மலர்ந்து. . . கனிவாய் மானிடம்
வேலை செல்ல விழைந்த அவ்வேளை
ஆழி. . . .தன் வாயை அகல விரித்து
ஊழித்தீபோல் உடைப்பெடுத்ததால்
கோழிகள் போல கொடிய அலைக்குள்
மானுடம் அங்கே மிதந்தது கண்டோம்.

கண்சிமிட்டி மூடுவதற்குள். . .
கண்ணா மூச்சி ஆட்டம் ஒன்று
சுனாமி என்ற போர்வைக்குள்ளே
சுடு காடாய் மாறிப்போனது

விஞ்ஞானத்தையும் விஞ்சிய விந்தை
விடியற் பொழுது ஒன்பது இருபது
தஞ்சம் கேட்டுத் தவிப்பதற்குள்
தாவி வந்து அடித்துச் சென்றதால்

மரணஓலம். . . வானைப் பிளந்தது
மக்கள் சிலையாய் மலைத்து நின்றனர்
இந்தோனேசியா. . . சுமாத்ரா தீவில்
இடிபோல் மின்னி எழுந்த சுனாமி

ஆசியக்கடலை அண்மிய பகுதியை
அடித்துத் துவம்சம் செய்த வேளை தான்
விஞ்ஞானத்தின் கண்திறந்தது
வியந்து மூக்கில் விரலை வைத்தது

உலக நாடுகள் உசாராயின
உறுமி வந்தன வாகன அலைகள்

உதவிக் கரம் நீட்டி நின்றன
ஊடகம் தத்தம் பங்களிப்பிற்காய்
உரத்துச் சத்தம் போட்டு நின்றதால்

செய்தி அறிந்து . . . பன்னாட்டவரின்
சேவைப்பணிகள் தொடரலாயின

மூட்டை, மூட்டையாய் அரிசி மாவு
முக்கிய உணவு, உடைகளோடு

பாட்டம் பாட்டமாய் படையெடுத்ததால்
பாதிப்படைந்தோர் பரவசமாயினர்

உயிர் உடைமை அனைத்தும் இழந்து
ஒன்றும் இல்லா நிலையில் நின்றவர்

பயிர் செழிக்கத் தூவிய மழையில்
பக்குவமாக நனையத் தொடங்கினர்

இந்த மழைக்குள் இணைந்து கொள்ள
எங்கோ இருந்த குள்ள நரிகளும்

நாய், வல்லூறு, பருந்து ஈறாய்
நக்கல் வேலை செய்யத் தொடங்கின

வந்த வாகனம் வழிமறிப்பதும்
வக்கில்லாதோர் சுருட்டிக் கொள்வதும்
சந்தர்ப்பத்தைத் தந்திரமாக்கி

சட்டைப் பைக்குள் திணித்துக் கொண்டதும்
ஒன்றா. . .இரண்டா. . . சேச்சே. . .சொல்ல
இதயம் கூசும் இழிவு நடந்தது

அரசும் தத்தம் பணிகள் செய்ய
ஆவல் கொண்டதால் அவதியுற்றோர்

நிலை உணர்ந்து திட்டம் போட்டது
திட்டம் மட்டம் ஆனது சிலரால். . . .
இவ்வளவு தந்தால் . . .எல்லாம் நடக்கும்
இல்லை என்றால். . . .ஒன்றும் இல்லை
தந்திரமாய் மந்திரம் ஓதி
தருணம் பார்த்த உத்தியோகத்தர் பலர்
பந்தம் பெற்று பணக்காரனாய்
பவிசாய் வாழத்துடித்து நின்றனர்

சுனாமி எதனையும் அறியாதோரும்
சுகம் கண்டு கொழுத்துப் போயினர்

இத்தகு கொடுமை இழைப்பது எவரால் . . .
இலவு காத்த கிளியாய் இன்னும் . . .
வாழ்ந்தது போதும் என்று வைரம்
முற்றிய நிலையில் பாதிப்படைந்தோர்

எழுந்தனர்; இரும்புத்தூண்கள் எனலாய்
எரிமலை போல் "டி – எஸ். ஒப்பீஸ்"
காரியாலயம் உடைத்தெறிந்ததும்
காட்டாறாக உள் நுழைந்ததும்
ஊடகம் ஊடாய் உண்மை அறிந்தோம்.

அரசு, அரச சார்பற்றோரின்
அகதிப்பணிகள் ஊழல் தீயில்
அசுர வேகம் பெற்ற நிலையில்
அவதியுற்றோர் அகதி முகாமில். . .
இன்னும் வாழ்தல் தொடர்வது முறையா?

மரத்தால் விழுந்தும் மாடு மிதித்த
கதையை மேலும் வளர விட்டால்
உரம் போட்டு ஊழல் வளர்க்க
உதவுவதற்கு ஒப்பாகாதா?

வேலியே பயிரை மேய்வது சரியா?
பயிரை வேலி மேய்ந்த கதைகள்
பாரில் ஏதும் நிகழ்ந்தது உண்டா?
இப்படியானோர் செப்படி வித்தை
இன்னும் தொடர்தல் முறையாகாது.

எரிகிற நெருப்பில் எண்ணெய் வார்த்து
இங்கிதம் தேடும் எலிகளைப் பிடித்து

சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும்
தக்க பாடம் புகட்ட வேண்டும்

பாதிப்புற்றோர் பட்டியல் ஆய்வில்
பக்குவமாகக் கொணர்ந்த பின்னர்

நீதி, நேர்மை கொண்டோர் குழுவிடம்
நிலையாய் மனைகள் அமைத்து வழங்கி
பேதம் மறந்து செயல்பட வேண்டும்
பித்தலாட்டம் ஒழிந்திட வேண்டும்.

சுனாமி வந்தது; சில பேர்க்கல்ல
சூழ உள்ளோர் கண்டு திருந்திட
இதனை மறந்து இருளில் இன்னும்
ஏனோ? மனிதர் மாறிச் செல்கிறார்

அடுத்த சுனாமி தொடுப்பதற்குள்
அனைவரும் ஒன்றாய் ஆத்மீகத்தில்
இறுக்கமாக நுழைதல் வேண்டும்
இல்லையென்றால். . . எல்லோரும் இறை
சாபத்திற்குள் சாதல் நேரும்
சரித்திரம் சாற்றும் உண்மையும் இதுவே
கடவுள் எம்மைக் காப்பானாக
கருணை வழியில் சேர்ப்பானாக

வழி காணுவோம்

பச்சை வட பன் தொப்பி
கச்சுடனே மண்வெட்டி
பாத்திகள் நிரைகட்டினான் –நெற்
பயிர் விளை நிலமாக்கினான் –நிலம்

எச்சுவடும் தெரியாது
எழிலான வயல் கண்டு
இன்பத்தில் அவனாடினான்

வாய்க்காலின் வரம்பூடே
வழிந்தோடும் சுரி நீரை
தேக்கியே நீர்பாய்ச்சினான்– வாழ்வில்
தேய்பிறை போ லாகினான்– வீசும்

பேய்க் காற்றுப் பேரிடி
தாங்காது மண் விட்டுப்
பெயர்ந்திட்ட மரமாகினான்

அரைவயிற்றுணவுக்குப்
பசியோடு போராடி
அலைமோதும் துயர் பெற்றவன் – அவன்
அனுதினமும் உழைத்திட்டவன்

நுரை தள்ளும் மாடாக
நிலமோடு போராடி
நிறைவான பயிர் கண்டவன்

குறைபாடு நீங்கிடக்
குவலயம் காத்தவன்
குடி உய்ய வழிகாணுவோம்

காசிம் காக்கா

வீதியிலே ஓருருவம் வீழ்ந்து கிடக்கிறது
பாதையிலே செல்வோர்கள் பார்த்தேதான் போகின்றார்

ஆதரவு தருதற்கு ஆருமற்ற அவ்வுருவம்
பாதையிலே நெடுநேரம் படுத்துக் கிடக்கிறது

இடையிடையே முனகல்கள், எதிர்கொள்ளும் வாந்தியொடு
அடிபட்ட நாகம் போல் அவ்வுருவம் நெளிகிறது

என்ன நடந்ததுவோ. . . ? ஏனிந்த அவல நிலை?
அறிகின்ற ஆவலினால் அருகிலே செல்கின்றேன்

கந்தல் உடை, களைகட்டும் முகபாவம்
பக்கத்தில் கோடாரி, படுத்துக் கிடப்பவர்
என்போல எல்லோர்க்கும் பரிச்சயமானவர்தான்

காசிம்காக்காவா. . . ? கன நேரம் வீதியிலே
தூசிக்கும் மதிப்பற்று துவண்டு படுக்கின்றார்

ஏ. . . காக்கா. . . உமக்கு என்ன நடந்ததுவோ?
வீதியிலே ஏனிங்கு வீழ்ந்து கிடக்கின்றாய்?

எந்தன் குரல் கேட்டு எழும்பவும் முடியாமல்
காசிம் காக்காவோ கனிவோடு பார்க்கின்றார்

"அடதம்பி! என்செல்ல அறவாப்போவானுகள்
நல்லா இருப்பானோ நாசமாப் போக
போடியார் மகனாம். . . போடியா இவனுகள்?"
சொல்லி முடிக்க முடியாமல் காக்காவோ
சோர்ந்து விழுகின்றார் உண்மை புரிகிறது

கொத்திய கொள்ளிக்காய் கூலி வழங்காமல்
பத்தை நீட்டிய பரிதாபம். . . . அதனோடு
மூன்று குழந்தைகள், மனைவி இவர்களினை
இப்பத்தால் பொழுதை எப்படித்தான் கழிப்பதுவோ?

என்று நினைக்க இருண்டு தலை சுற்றி
குப்பற விழுந்து கோடாரி போல் கிடக்கின்ற
காக்காமார் இங்கே கனபேர்கள் உள்ளார்கள்

"வியர் வற்று முன் கூலி விருப்போடு ஈந்திடுக"
நயமாகச் சொன்ன நபி நாதர் வழிவிட்டு

ஏழைகளின் குருதியிலே இன்பத்தை நுகர்கின்ற
கோழைகளுக்கெங்கே? இக்கொடுமை விளங்கவரும்?

என்று சபித்தே. . . . எழுந்து நடக்கின்றேன்
இன்னும். . . . . .
பாதையிலே காக்கா படுத்தேதான் கிடக்கின்றார்.

சந்தியில் குந்தாதே!

சந்தியில் குந்தாதே. . . !
சலனங்கள் அதுவாகும்

மந்தி போல் குந்தி. . .
மாய் ஜாலம் காட்டுவதால்

தொந்தரவு தான் நீளும்
தோழா! நீ சிந்தித்தே
சந்தியில் குந்தாதே
சலனங்கள் அதுவாகும்

அண்ணல் நபி மிக்க
அழகாகச் சொன்னார்கள்
"திண்ணம் நரகத்தின்
திறவுகோல் தெருச்சந்தி"

"அல்லாஹ்வின் இல்லம்
அழகிய சொர்க்கத்தைச்
சேர்ப்பிக்க வைக்கும்
சிறந்த கலைக்கூடம்"

இந்த வழி விட்டு. . .இரவு பகலாக. . .
சந்தியே, தஞ்சம், சமுதாய நாகரிகம்

இதுவென்றே சொல்லி
அழிவாக பலருடைய

கோள்கள் பலபேசி
கொலை வெறிக்கும் ஆளாகி
கத்திக்குத்துக்கும். . . .
கடுஞ்சமர்க்கும் இரையாகி
கோடு, சிறை என்ன?
கொடு நரகில் தள்ளிவிடும்
சந்தியில் குந்தாதே. . . !
சலனங்கள் அதுவாகும்
மந்திபோல் குந்தி
மாய்ஜாலம் காட்டுவதால்
தொந்தரவு தான் நீளும்
தோழா நீ! சிந்தித்தே
சந்தியில் குந்தாதே
சலனங்கள் அதுவாகும்

கட்டாக்காலிகள்

வீதிகள் தோறும் விசர்பிடித்த
கட்டாக்காலிகள் கனத்து விட்டன

பாதை; இன்று பயங்கரமானதே

வயதில் முதியோர் வாலிபமானோர்
சிறியோர், பெரியோர், செல்லும்பாதை

கட்டுப்பாடுகள், கண்டிப்பில்லாக்
கட்டாக்காலிகள் பெருகி உள்ளதால்

கவனம் தேவை; கவனம் இன்றேல்
சறுக்கி விழுந்து சாகவும் நேரும்

முந்தியும் ஒரு நாள் முனகல் ஓசை
தந்திரமாகத் தப்ப நேர்ந்தது

இன்னும். .. இன்னும். . . இந்த ஓசை
எழும்போது இதயந்தாங்குமா?

கௌரவமில்லாக் கட்டாக்காலிகள்
காலைக் கௌவக் கங்கணம் கொண்டதே!

எங்கள் பாதை ரம்மியமானது;
எங்கள் பாதை ஏற்றம் பெற்றது

எங்கள் பாதை இடையே நின்று
தடைகள் போடும் தலைக்கனம் கொண்ட
கட்டாக்காலிகள் கலைந்துசெல்லக்
கல்லைவீசிக் கலைத்தும் பார்த்தோம்.

எழும்புவதாக இன்னும் இலையே!
எளிய வேலை தொடர்தல் கூடுமா?
சிறுகச்சிறுகச் செப்பியும் புத்தி
பிடிபடவில்லை, பிழையைக் கண்டு

ஒதுங்கி வாழ்வதும் உத்தமம் ஆகா.

தொட்டிற் பழக்கம் தொலைந்து போகவும்
கட்டாக் காலிகள் கவலை நீங்கவும்

விட்டு வைப்பது விடிவைத் தாரா
இன்னும் இந்த விசர்கள் பலரைத்
தொற்றிக் கொள்ளவும் கூடும் அன்றோ!

தொற்று வியாதி தொடர்வதற்கும்
முற்றாய் இதனைக் களைதல் வேண்டும்

அதனால். . . எங்கள் சமூகம் காக்கவும்
அதனால் எங்கள் தனித்துவம் பேணவும்

தோசம் நீங்கித் தூய்மை பெறவும்
தோட்டா ஒன்றே பாடம் புகட்டும்

வீதிகள் தோறும் விசர் பிடித்த
கட்டாக்காலிகள் கனத்து விட்டன.

மாலைப் பொழுதினிலே

மாலை மங்கை மலர்ந்த வேளை
எங்கள் ஊரின் பஸார் வீதியில்
தன்னந்தனியே ஒன்றி நிற்கிறேன்
என்னுள் ஏதோ. . .எழுந்து. .. . . எழுந்து
இதய வீணை மீட்டிக் கொண்டது

சந்தையில் ஆங்கே சாமான் வாங்க
திரளும் மக்கள் கூட்டம் காண்கிறேன்
பக்தர் சிலரும் பள்ளி ஏகினர்.
காளையர் கூட்டம் அரட்டைசெய்து
களிப்பினோடு கூடி நின்றது

தேனீர்ச்சாலை, சில்லறைக்கடைகள்,
"சீமென்ற்", புடைவை தினுசு வகையொடு
இப்படியாக தொங்கல் கடை வரை
பஸார் மிக நீண்டு தொடர்ந்தது

உறுமி வந்த வாகன மொன்று
ஓரம் போவெனச் சொல்வது போல
விரைந்து சென்றதால் விலகி நிற்கிறேன்
கணப்பொழுதில் காட்சியொன்று
கண்ணில்பட்டு கருத்தை ஈர்த்தது

எறிந்த எலும்புத் துண்டை அடைந்திட
இரண்டு நாய்கள் மோதிக் கொண்டன
எந்தன் சிந்தனை கனலாய் மூண்டது

எலும்புத் துண்டா? இந்த உலகம்
அடையும் நாய்களா? நாங்கள் சீச்சீ. . .
உழைப்பதற்கும் வீணே கூடிக்
கதைப்பதற்குமா? இங்கு பிறந்தோம்

அந்தி மாலை சிந்தியவேளை
சிந்தனையோட்டம் சிறகடித்தது
பின்னே! நோக்கி உற்றுப் பார்க்கிறேன்
கருமை சற்றுக் கனிந்து வந்ததால்
பள்ளியை நோக்கி மெள்ள நகர்கிறேன்
பசுமை நெஞ்சில் படர்ந்து வந்தது

பொறுமை சாலிகள்

மண்ணின் மகா புருஷர்களே!
உங்கள். . . மண்டைக்கனம்
எங்களுக்கும் புரிகிறது
என்றாலும். . . .நாங்கள் பொறுமைசாலிகள்

எங்கள் பொன்மேனியில். . .
உங்கள் பா(வ)தச்சுவடுகள்
தற்பெருமைக்காரர் என்ற
தடத்தை அல்லவா பதியச் செய்கின்றன

என்றாலும். . . . நாங்கள் பொறுமைசாலிகள்

உங்கள் அறியாமை. . . இல்லை
அகங்கார, தர்பார் அத்துமீறல்களுக்கு
முகம் கொடுத்து, முன்னேறத் துணை செய்யும்
எங்கள் முதுகு

உங்கள் காவாலிச்சேட்டைகளுக்குக்
களமாகவும் அமையலாம்

ஆனாலும். . . .நாங்கள் பொறுமைசாலிகள்

எங்கள் பொறுமை எல்லை மீறினால்
என்னவாகும் . . . . என்பதும்
நீங்கள் அறியாததா? என்ன
என்றாலும் நாங்கள் பொறுமைசாலிகள்

என்றோ. . . எப்போதோ. . ..ஓர் நாள்
எங்கள் வயிற்றறைக்குள்தானே
உங்கள் கல்லறையின் தரிசனம்
நிகழப் போகிறது. . . அதுவரை

நாங்கள் பொறுமைசாலிகள்

பாலையிலே ஓராத்மா

பாலையிலே ஓராத்மா. . . பதறித்துடிக்கிறது
வேலை செலவும் விரும்பாது ஓராத்மா
பாலையிலே நொந்து மனம் பதறித்துடிக்கிறது

ஈரைந்துமாத இருட்டறையுள் வைத்தெம்மைச்
சீராய் வளர்த்து சிறப்பாக்கி வைத்தவளை
பாராது; சேயோ படாடோப வாழ்க்கையிலே
மூழ்கி யெழுதல் முறையாமோ? அதனாலே
பாலையிலே ஓராத்மா. . . பதறித்துடிக்கிறது

இந்துமா ஆழியின் எழிலரசி என் மாதா
இலங்கை அவளின் எழிலான திருநாமம்
நாற்பத்து எட்டில் தான் நறுமணம் செய்தவளாம்
சுதந்திரத் தாயாய் சுகமாக வாழ்ந்தவளே

தொற்றுநோய் ஒன்றால் தொல்லை பிடித்தவளாய்
கணவனை இழந்த கைம்பெண்போல் மனமுருகி
தினமும் உயிருக்காய் திண்டாடி குருதிக்குள்
நனைகின்ற அந்த நரகத்து வேதனையைக்
கண்டே மனமுருகிக் கவல்கின்ற உணர்வோடு

பாலையிலே. . . ஓராத்மா. . . பதறித்துடிக்கிறது

அன்னை மடியில் அழகாக வளர்ந்தவர்கள்
தன்னை அழித்தே தடம் மாறிச் செல்கின்றார்

எங்கும் விழற்குண்டு எதிரொலித்து நிற்கிறது
பங்கம் விளைந்தே பரிதாபம் ஆகிறது

ஆத்மீகம் எல்லாம் அடியோடு மாய்ந்ததுவோ?
போராட்டம் ஒன்றே புரையோடிச் செல்கிறதே

அன்பு மனையாள் அதரத்தில் கள்ளருந்திச்
சென்றவர் எங்கோ சிறைபட்டு நிற்கின்றார்.

சின்னக் குடிலைசக்குள் சிணுங்கி உயிருக்காய்ப்
போராடி நின்றவர்கள் போக்கற்ற சில பேரால்

கூட்டைக் கலைத்த குருவிபோல் சிதறுண்டு
ஓட்டம் பிடிக்கின்றார்; ஓட முடியாதோர்
துப்பாக்கி வேட்டினால் தூளாகி மாள்கின்றார்

இந்தவிதமாய். . . இடுகாடாய் எம்மாதா
நொந்து துடிப்பதனை நோக்காது எங்கோ
செல்கின்ற மைந்தர்காள் செவிசாய்த்துக் கேளுங்கள்

பாம்பு, நரி, நாய்கள், பல்லிகள் ஈறாக
மாண்புடனே ஒன்றி மகிழ்வோடு வாழ்கிறது.

ஆறறிவு கொண்ட அருமை மனித இனம்
கூறாகி நின்று கொடுமைக்குள் தினம் வீழ்ந்து
பட்டினியும் பொல்லாப் படுகொலையும் தொடர்கதையாய்

எட்டி, என்காதில் எதிர் கொண்டு தாக்குகையில்
சந்தோசம் வருமா? சமாதானம் காணாது

பாலையிலே ஓராத்மா. . . பதறித்துடிக்கிறது
வேலை செலவும் விரும்பாது ஓராத்மா
பாலையிலே நொந்து மனம் பதறித்துடிக்கிறது.

ஓடி வாங்க

"காரு" வாங்க காசுமிழக்க
கப்பலேறிப் போறனென்று
ஊருவிட்டுப் போன மச்சான்
உன் நிலைமை என்ன ஆச்சு

வெள்ளி நிலா தண்ணொளியை
வெண் மணலில் பரப்புதுகா
வெள்ளாற்றுப் பூப்பாயி லென்
ஆசை விளையாடுதுகா

ஊண் சமைக்க மனசுமில்லை
உறங்கலுக்குத் துணையுமில்லை
காண்பதெல்லாம் உன் நினைவுக்
கவலைகளே வாட்டுதுகா

கலியாணம் கொண்ட மச்சான்
காசிருந்து என்ன மிச்சம்
பலியாக எனை வாடிப்
பார்க்காம ஓடி வாங்க

பெருநாள் பரிசு

வெண்பட்டாடை விரித்த வானில். . .
"ஈத்" பிறை மிக்க எழிலாய்த் தெரிந்தது.

நாளை விடிந்தால் ஹஜ்ஜுப் பெருநாள்
நாலாதிசையும் மகிழ்ச்சியின் சங்கமம்

வெடியின் ஓசை, மின் அலங்காரம்
குஸியாய் மக்கள் குதூகலித்தனர்

"வட்டிலப்பம், அல்வா, மஸ்கத்
சுட்டு நாளை சுவைத்திட எண்ணி
எட்டு நாளின் முன்னே இந்த
ஏற்பாடெல்லாம் செய்து முடித்தனர்

ஆசியா ராத்தா அடுப்படி மட்டும்
எட்டு நாளாய். . .எரியவே இலையே
பட்டினியாக பச்சைக் குழந்தை
இருவரோடு இவவும் சேர்ந்து
ஒட்டிய வயிறும், உலர்ந்த மேனியுமாய். . .

எட்டு நாளாய் இப்படிக் கிடக்கிறா

இருமி. . .இருமி. . .காலம் கழிக்கிறா

நாளை விடிந்தால் ஹஜ்ஜுப் பெருநாள்
நாலாதிசையும் மகிழ்ச்சியின் சங்கமம்

பொழுது புலர்ந்தது; போடியார் இசுமான்
எழுந்து பொது வேலியைப் பார்க்கிறார்

ஆசியா ராத்தா. . .அவதியோட
இருமி.. . .இருமி. . .இன்னும் இருக்கிறா

போடியாருக்கோ பொறுமை வருமா?
அடியேய்! இந்த அருமை நாளிலா
இருமி. . .இருமி. . இப்படிக் கிடக்கிறாய்
முழி விசளம். . .சனியனில். . .சீச்சீ. . .

போடீ. . . .அங்கால புலம்பியவாறே
"கொத்பா"வுக்குப் புறப்படலானார்

ஆசியா ராத்தா. . .அமைதியோட
இருகரமேந்தி ஏதோ. . .கேட்கிறா

கண்டச்சாரன், கறுத்த "பெல்ற்று"
மூக்கைப் பிய்க்கும் மோகன அத்தர்
இத்தியாதி எழிலாய்ப் போடியார்
பள்ளியை நோக்கி உள்ளே நுழைகிறார்

பரீத் ஆலிம் "கொத்பா" நிகழ்த்தினார்

"அண்டை வீட்டான் பசித்திருக்க
உண்டு மகிழல் உத்தமம் ஆகா"

"தியாகம் என்பதே இசுலாம் ஆகும்
தியாகம் என்பதே ஈமான் ஆகும்"
"அருமை மகனை அல்லாஹ்வுக்காய்
அறுக்கத்துணிந்த அருமை நாளிது"

செவிடன் காதில் ஊதிய சங்காய் . . . .
போடியார் . . . .மெல்ல வெளியே வருகிறார்

ஆடி. . . ஆடி . . . அசைந்து வருகையில் . . . . .
ஓடி வந்த காரு ஒன்று
உறுமிச் சென்று உரசிச் செல்ல
குருதிக்குளத்தில் கர்வம் ஒன்று

குற்றுயிராகி அழிந்து போனதோ . . ?
ஏழைகண்ணீர் கூரிய வாளோ . . .?

ஆசியா ராத்தா அந்தப் பிரார்த்தனை
அல்லாஹ் இடத்தில் ஏற்கப்பட்டதோ . . .?

வெண்பட்டாடை விரித்தவானில்
ஈத் பிறை மிக்க எழிலாய்த் தெரிந்தது
நாளை விடிந்தால். . .ஹஜ்ஜுப் பெருநாள்
நாலா திசையும் மகிழ்ச்சியின் சங்கமம்

நீ. . . . தருவாயா. . .?

கவினுறு உலகிடை காண் எழில் காட்சிப்
பொருள் நினதுடைமை ஆகுமடா- அது
கணமெலா முன்னினை வூட்டுமடா

புவியினி லொரு கவி புனையப் புதுமை
பூத்துப் பொங்கி வழியுதடா- வளம்
கோத்துக் காய்த்துச் சொரியுதடா

விண்ணில் வான் மேற் பரப்பினில் விரித்த
வெண்பட் டாடைதோணுதடா- அது
விந்தை காட்டி மகிழுதடா

தண்மதி நீந்தித் தகதகவென இத்
தரணியிலொளியினை ஊட்டுதடா- சீர்
தகைமை பெற வழி காட்டுதடா

ஆடும் மயிலொடு கூவும் குயிலினம்
கோடித்தத்துவம் பேசுதடா- தினம்
சக்தியினை எடுத்தோதுதடா

ஓடும் மானொடு கூவும் குயிலினம்
பக்திக்கே அடி கோலுதடா- உன்
சக்தியினை எடுத்தோதுதடா

எங்கும், எதிலும் இறைவா! உன்றன்
எழிலே மின்னிப் பொலியுதடா- என்
இதயாசனத்தில் ஒளிருதடா

பொங்கும் கடலாய்; விரைந்தே எனையே
புகழோய்! அருள வருவாயா? சிரம்
பணிந்தேன், வரம் நீ தருவாயா?

கல்முனைக் கடற்கரை

கலைத்துவம் மிக்க கன்னிப் பெண்ணாய்
கல்முனைக் கடற்கரை காட்சி தந்தது

மக்கள் ஆங்கே மகிழ்ச்சிக்கடலில்
துள்ளி மிதந்தனர்; துன்பம் மறந்தனர்

சிறுவர், இளைஞர், முதியோர் ஈறாய்
சிரித்தே நாளும் பொழுதைப் போக்குவர்

கடலே. . . .கடலே. . . .வடை. . . .வடை என்றே
கடலைக்காரன் அங்கே வருவான்

அதனை வாங்கி அழகாய் உண்டு
அந்த மண்ணில் சாய்ந்து கிடப்போம்

ஆழக் கடலின் அழகிய தென்றல்
மேலைத் தழுவி மெல்லிசை பாடும்

மலைபோல் தாவும் அலையைப் பார்த்தே
மக்கள் அதனில் மயங்கி நிற்பர்

சின்னஞ்சிறுவர், சிறுமியர் ஆங்கே
சிற்பி பொறுக்கிச் சேர்த்து மகிழ்வர்

அலையின் ஊடே ஊரும் நண்டை
அழகாய்ப் பற்றி ஆர்ப்பரிப்பர்

திங்கள் ஒளியில் தங்கப் பாளமாய்
திகழும் ஆழி அதனை ரசிப்போம்

கவலை இன்றி இரவு பூராய்
கடற்கரை மணலில். . .
கவிதை பாடுவோம்
ஆனால். . . இன்றோ. . .

எங்கள் இன்னல் போக்கிய இடமோ. . .
இருண்ட வலயமாய் இற்றுப் போனதே. . .!

அங்கே சென்று ஆறுதல் கொள்ள
அருகதையற்றுப் போனது ஏனோ?

இயற்கை அழகை நுகரவிடாது
பயத்தை ஊட்டிய பாவிகள் யாரோ. . .?

யாரும் அற்ற அநாதை போல
அந்தப் பெரு வெளி ஆகிப் போனதே

கலைத்துவம் மிக்க கன்னிப் பெண்ணாய்
கல்முனைக் கடற்கரை காட்சி தந்தது.

நச்சுப் பாம்புகள்

பாம்பு வருகிறது, பதம் பார்க்க வாருங்கள்
கம்பை எடு தம்பீ. . . மிகக் கவனமாய் அடியுங்கோ
பாம்பு வருகிறது, பதம் பார்க்க வாருங்கள்

சாரை. . . .புடையன். . . .கருவழல. . . .நல்லபாம்பு
நாகம். . . .விரியன். .. . . வெங்கழாத்தி இது ஈறாய்

எத்தனையோ பாம்புகள் இடையூறு தருவதற்கு
சுற்றி வரும், அப்போ சுணங்காது வீரமுடன்
கம்பை எடு தம்பீ. . . மிகக் கவனமாய் அடியுங்கோ

முன்னே! ஒருமுறை மோதினார் செல்வமகன்
சின்னப் பயலவன் சினிமாவுக்குச் செல்லுகையில்
ஓடை முடுக்கில் ஒளிந்திருந்து ஓடிவந்து
காலிலே கொத்தியதால் காலமாகிப் போன கதை
இன்னும். . . . எம்முன்னே எதிரொலித்து நிற்கிறதே

கந்தையா மூத்தமகன் கந்தப்பு வாத்தியார்
சொந்த வயலுக்குள ஊடடிக்கப் போனவராம்
வக்கடைக்குள் நின்ற வரிப்புடையன் ஒன்று வந்து
அக்கணமே உயிர் குடித்த அநியாயம் மறந்தனையோ?

சில்வா நடுப்புதல்வர் சிவில் இன்ஜினீயர்
கொல்லைப்புறத்தே குளிர்காயப் போனவர்தான்
கல்லின் இடுக்கில் கன நாளாய்க் காத்திருந்த
சாரையினால் தீண்டி சாவை அணைத்தாரே

இப்படியாய். . . .நல்ல இதயங்கள் உள்ளவரை
கற்றறிந்த பெரும் கனவான்கள் பலபேரை
அநியாயம் ஒன்றும் அறியாத மக்களினை
பழிபாவம் சாராத பச்சைக் குழந்தைகளை
கொன்று உயிர் போக்கும் கொடுமையினைப் போக்குதற்காய்

கம்பை எடு தம்பி! கவனமாய் அடியுங்கோ
இரும்பும் அங்குண்டு, எடுத்துவா தம்பி
கோடாரியும், கத்தி, கொடுவாளும் தேவை தான்

ஏனென்றால். . . . .

புற்றுக்கள் ஆங்காங்கே புதையல் போல் நீள்கிறது
அத்தனையும் கொத்தி அதனுள் இருக்கின்ற

பாம்புகள் ஒவ்வொன்றாய். .. . .
பதம் பார்த்தால் நாமிங்கே

தப்பலாம், இலையென்றால் தப்பாது அனைவரும்

நச்சுப் பாம்புக்கே நாம் இரை ஆகிடுவோம்

பாம்பு வருகிறது, பதம் பார்க்க வாருங்கள்.
கம்பை எடு தம்பி. . . மிகக் கவனமாய் அடியுங்கோ

சூரிய காந்தி

வரண்ட பாலை நிலத்திடையே
வண்ணக் கிண்ணி எழிலுருவாய்

திரண்ட குப்பைக் கீரைகளும்
தீரம் இன்றி அடிசாய

உருண்ட வட்ட முகம் மலர
உதயக் கதிரில் சிரிப்புதிர

சூரிய காந்தி மலர்ந்ததுவோ?
சுகந்தம் நெஞ்சில் எழுந்ததுவோ?

ஓரம் போதல் உண்மையிலே
உலர்ந்து போன மலர்களதே
சாரம் இன்றிச் சமுதாய
சாந்தியூட்டா மலர்களினால். . .
யாருக்கென்ன லாபமடா?
என்றே பலரும் உணர்ந்ததனால்

சூரிய காந்தி மலர்ந்ததுவோ?
சுகந்தம் நெஞ்சில் எழுந்ததுவோ?

காடு, மேடு, களி கொள்ள
கங்குல் நீங்கி ஒளி பாய

பாடு பட்டே காத்ததனால்
பசுமை பெற்றே எழுந்தாயே

நீடு வாழ வாழ்த்துகிறோம்
நிலமகள் சிரித்திடச் செய்வாயே

"பாரதப் பிரதமராயிருந்த இந்திரா"
காந்தி அம்மையார் பொதுத் தேர்தல்
ஒன்றில் என்ற தன் நினைவாக

இருளும் ஒளியும்

வீதியிலே விளக்கேற்ற விரைகின்றார் தலைவர்கள்
வீதியிலே விளக்கின்றேல் . . . . வினை பல நேர்ந்ததனைப்
பாதையிலே செல்வோர்கள் பரிதாபம் உணர்ந்ததனால். . .
வீதியிலே விளக்கேற்ற விரைகின்றார் தலைவர்கள்

வாழ்க்கையிலே தோற்றவர்கள் வழுக்கி விழுந்தவர்கள்
இலட்சியம் ஏதேனும் இல்லாத இழிஞர்கள்
ஒன்றுக்கும் உதவாத ஊதாரிக் கும்பல்கள்
நின்று. . . கதைபேசி. . . .நித்திரையில் கொள்ளையிடும்

முச்சந்தி வீதி முனைப்பில் ஒளியேற்ற
எல்லோரும் இன்று எழுந்துள்ளார் உண்மை தான்
வீதியிலே ஒளி வேண்டும், விசர் பிடித்த நாய்களினால்
கற்பை இழந்த கன்னியர்கள் ஏராளம்

அன்புடைய அத்தானால் ஆசையுடன் அணிவித்த
தாலிக் கொடியிழந்த தங்கை மார் பலருண்டு

இத்தனைக்கும் ஒருமுடிவு இருள் நீங்கி ஒளி ஈந்தால்
சத்தியமாய் எல்லாம் சரியாகும். . .என்றா . . . ?
பாதையிலே ஒளியேற்ற பலரும் முனைகின்றார்

முன்னரும் இவ்வாறு முனைந்து ஒளி நல்க
பின்னர் அதனைப் பேய்கள் உடைத்தெறிந்து
தன் தொழிலை மீண்டும் தலை தெறிக்கச் செய்ததனை
ஏனிந்தத் தலைவர்கள் இதயம் மறந்தனரோ?

வீதிக்கு விளக்கேற்றல் விடிவுக்கு ஒவ்வாது
கட்டடம் மேலே கருங்கல்லால் கட்டிப்பின்
அடித்தளம் களிமண்ணால் ஆனகதை அதைவிட்டு

வாருங்கள். . . .தலைவர்காள். . .
வருங்கால சமுதாயம்
ஆத்மீக ஒளியாலே அரண் செய்யப்பட வேண்டும்
சிந்தையிலே ஒளியேற்ற
சீக்கிரமே முன் வந்தால். . . .

எந்த ஒளியும் எமக்கிங்குவேண்டாமே
கங்குற் பொழுதினிலும் கண்மூடி நாமிங்கே
எங்கும் உலாச் சென்று எழிலாக வாழ்ந்திடலாம்

இதை விட்டு. . .

வீதியிலே விளக்கேற்ற
விரைவதனால் என்ன பயன்?

இது என்ன நிலையோ?

அட்டைக் கடியிடை வட்டை வயல் வெளியில்
ஒட்டுக் கிழித்த உடலா. . . . ? அனல்
சுட்டுச் சுருண்ட உருவா. . .தினம்

நட்ட நடுச்சாமம் கொட்டும் பனி மூட்டம்
பட்டுத் தெறித்த பழுதா. . . ?வள்ளி
கட்டுக் குலைந்த நிலை ஏன்?

கூனல் விழுந்த நிலை ஏனோ அறியனடி?
மானே! மயக்கமெனவோ . . .? சொல்
நாணும் தயக்க மெதுவோ?

தோணும் பயிரிடையே காணும் களைகளினை
நாளும் களைந்த விழைவோ? வாழ்வில்
சூழும் துயரின் சுமையோ?

கம்புத் தடியினொடு நம்பிக் கரைந்து உடல்
வெம்பிக் கதிர் அடித்ததோ? துயர்
சம்பிச் சமையும் நிலையோ?

கும்பம் குவித்து நெல் கூட்டிப் பதர் நீக்க
எம்மட்டு வந்ததடியோ? கூலி
கண்பட்டுப் போன வடிவோ . . . ?

புதிய விடியலுக்காக

ஓ. . . . நண்பா. . . .!
நேற்றைய நினைவுகளை
அசைபோட்டா . . . . ? நீ
இப்படி நித்திரையில் கிடக்கிறாய்

ஓமோம். . . உன் நினைவுச் சுருதிக்குள்
மீட்டும் . . . .முகாரியின் அனர்த்தம்
எனக்கும் புரிகிறது

என்றாலும். . . . நீ. . . .கோழை
காற்றில் அடிபட்ட கடதாசியாய். . .
உன் வசந்தம் கசங்கி
சீ. . . இன்னுமா தூங்குகிறாய்?
எழுந்திரு. . .

நிகழ்வுகள் அனுபவமாய்
நாளைய பொழுதுகள் நமக்காய் விடிய
அதோ!. . . இளமை வானின்
மகிழ்ச்சிப் பௌர்ணமி
துயர அமாவாசையில் ஊடறுத்து

நம்பிக்கை ஒளி ஏற்றுகிறதே
கண்டும். . ..
ஓ. . . . . நண்பா. . . . .நீ
இன்னுமா தூங்குகிறாய்?
எழுந்திரு. . . .
புதிய விடியலின்
புனித யாத்திரைக்காய். . .

அன்புள்ள தங்கைக்கு

நங்கையே! உமக்கிந்த
நளினங்கள் ஏனம்மா?
பங்கம் வரும் அதனால்
கொஞ்சம் பார்த்து நட பெண்ணே!

நங்கையே! உமக்கிந்த
நளினங்கள் ஏனம்மா?

உன் போன்ற பெண்ணேபோல்
உலவித்திரிந்தோர் தம்
கண்போன்ற கற்பதனைக்
கடைத்தெருவில் விற்ற கதை

ஒன்றா. . . .இரண்டா. . . . . .
ஒரு கோடி. . . அதனாலே

நங்கையே! உமக்கிந்த
நளினங்கள் ஏனம்மா?

வண்டுகளாய். . . இங்கே. . . .
வட்டமிடும் வாலிபர்கள்
கண்டு களித்திடவா. . . ?
காம வெறி ஊட்டுகிறாய் . . ?

"வெஸ்ரேன்" ரைப் ஆகி
விரலுக்கு மை பூசி. . . .
"லிப்ஸ்ரிக்" அடித்து
"ரிப் ரொப்பாய்" ஜீன்ஸ் மாட்டி
அன்ன நடை போட்டு நீ. . .
ஆடி அசைகையிலே. . .
கன்னம் இடப் பல்லோர்
காத்துக் கிடக்கின்றார்

அன்னவர் கண்ணில். . .
அமுதாக நீ பட்டால்
சும்மா விடுவாரா. . .?
சுகம் காண விழைவாரே
நங்கையே! உமக்கிந்த
நளினங்கள் ஏனம்மா?

பாத்திமா நாயகியின்
பரம்பரையில் வந்தவள் நீ
சாத்தானுக் கிரையாகும்
சங்கதியை ஏன் கற்றாய்?

"பர்தா" அது எங்கே!
பரலோகம் போனதுவோ. . .?
நாற்குணம் அதனை
நழுவ விடக் காரணமேன்?

ஆத்திரப்பட வேண்டாம்
ஆத்மீக அரணுக்குள்
நேர்த்தியாய் வா பெண்ணே!
நிச்சயம் பயம் ஏது. . . ?

எதிர்கால வார்ப்புகளை
உருவாக்கும் நாயகி நீ
புதிதாக வேஷங்கள்
போட்டு நடமாடாதே

இசுலாத்தின் கட்டளையை
ஏற்று நிதம் நடக்கின்ற
விசுவாசம் பூண்டவளாய்
விரைந்துவா என் கண்ணே!

நங்கையே! உமக்கிந்த
நளினங்கள் ஏனம்மா?
பங்கம் வரும் அதனால்
கொஞ்சம் பார்த்து நட பெண்ணே!

இதய வானில். . .

இதய வானில் இடி இடித்து
மின்னல் மின்னுது. . .எண்ணம்
எங்கோ தாவுது

உதய நிலா உள்ளிருந்து
உறக்கம் கொள்ளுது. . . துயர்
ஊட்டிக் கொல்லுது

பொடு பொடென்று கண்ணீர் மழை
பொங்கி வழியுது. . .முகப்
பொலிவு மாறுது

கிடுகிடுத்த பேரிரைச்சல்
காற்றடிக்குது. . . உடல்
கிறங்கிப் போகுது

கார்மேகக் கூட்டமெனத்
துன்பம் சூழுது. . .தினம்
துயரை ஊட்டுது

சீர் இன்றி வாழ்க்கை நிலை
சீறிப் பாயுது. . . நாளும்
சிந்தை நோகுது

வாழ்க்கை அலை பாறையிலே
வந்து மோதவே, அது
சிந்தி மீறவே

ஏழ்மை எனும் படகு அதில்
ஏறிப் போகவே, வழி
ஏது உலகிலே?

இன்பமும். . . துன்பமும். . .

இன்பம் உண்டு எதிலும் என்று
எண்ணியோடும் மனிதனே!
உன்னை எண்ணிப் பாரு
உண்மை உறுதியாகும் தோழனே!

இன்பமென்று காணுமெதிலும்
இல்லை; இன்பம் துன்பமே
இதனை எண்ணிப் பார்த்திடா
திருப்ப தனியாயமே

விழிகள், சோடி உண்டு, விந்தை
காட்சி கண்டு மகிழவே
விழியினூடே பீழை வந்து
வழிவதேனோ? உணருவாய்

நாசி தந்த நாயன் நல்ல
நறுமணத்தை நுகரவே
நாசித் துவா ரத்தினூடே
நாற்ற நீர் சுரப்பதேன்?

செவிப் புலனை ஈந்த வல்லோன்
செய்தி கேட்டு மகிழவே
செவியினுள்ளே தானே கெட்ட
சீழ் வழிந்து நாறுதே!

கை கால்கள் நாவெதற்கு
கண்ணியமாய் வாழவே
பொய், கொலைகள் காமவெறி
போட்டு அலை மோதவா?

அற்பமான துளியினாலே
ஆனவர், நாம் அறியடா
தற்பெருமை கொண்டு நாளும்
தரணி வாழல் ஞாயமா?

உலகென்ற பூங்காவில்
உலவுகின்ற வண்டதாய்
மலர் மேவும் தேனுண்டு
மதிமயங்கிப் போனதேன்?

அறிவுக்கடல் மேதை; இமாம்
கஸ்ஸாலி அறைகிறார்
ஆய்ந்து பார்த்தால் நீயோ வெறும்
தூசை விட மோசமே

இன்பம் உண்டு, எதிலுமென்று
எண்ணியோடும் மனிதனே!
உன்னை எண்ணிப் பாரு
உண்மை உறுதியாகும் தோழனே!

கோழியே. . . நீ கூவாதே. . .

கோழியே. . .! நீ. . .கூவாதே. . . உன்
கொக்கரிப்பு நீள்கிறது

எத்தனையோ நாட்களாய்
நானுந்தான் பார்க்கின்றேன்
பித்துப்பிடித்த பேய் போலக் கத்துகிறாய்

காலையிலும், மாலையிலும், நடுச்சாமவேளையிலும்
ஓலம் இடுகின்றாய்
உமக்கென்ன? நேர்ந்ததுவோ?

இந்த உலகம் நீ. . .கூவியா விடிகிறது?
அடுத்தவரைச் சற்றும்
ஆராய்ந்து பாராமல்
எடுத்ததற்கெல்லாம்
இறகடித்துக் கூவுவதேன்?

கூழ்முட்டை ஒன்றிட்ட
கொடும் செயலைச் சொல்லிடவா?
தன்னில் உயர்ந்தவர்கள்
தரணியிலே இல்லையெனும்
எண்ண வெளிப்பாடோ. . .?
எதற்காகக் கூவுகிறாய். . .?

ஆயிரம்முட்டைகள்
அதோ! பார் தெரிகிறதே
யார் இட்டார் என்று
யாருக்கும் தெரியாமல்
அடங்கிக் கிடக்கின்ற
ஆமைகள் பார்த்தாயா?
வீணாகக் கூவி என்
விசரைக் கிளப்பாதே
கோழியே. . . ! கூவாதே உன்
கொக்கரிப்பு நீள்கிறது.

உணர்வெழும்போதினிலே. .

எழுகிற பொழு திடை உருகிடுமெழுகென
அலைகிற மனிதர்கள் அவதியில் தினம் தினம்
கொழு கொழுவென வளர்ந் திடுபவர் நிலையினை
எழுதிட இதயம் அழுகிறதே. . .! ஓ. . .
இமயம் என உணர் வெழுகிறதே. . . .

கழிகிற நொடிபல அதனிடை குடிலிடை
அழுகிற மழலையின் அவதிகள் பெருகிட
விழியது நிலையொடு கணமதை எதிர் கொள
மளமளவென கவி எழுகிறதே. . .ஓ. . .
மாவலி ஆறாய்ப் பாய்கிறதே. . . .

பொதுவினில் புதுமைகள் புலம்பியே புனிதராய்
புவியினில் வாழ்பவர் இடருறு வழிகளின்
நிலையது, நினைவினில் பதியவே நகையொடு
நிதமொரு கவி உருப்பெறுகிறுதே. . . ஓ. . .
நெருப்பென நெஞ்சிடை எரிகிறதே. . .

இடருறுமடவா ரெழில் கற் பினை விலை
அளவிட விழைகிற அசுரர்கள் கெடுபிடி
விட இனிமுடியா திட முரம் பெறுகையில்
தட தட வென தமி ழுசைகிறதே. . .ஓ . . .
தசை நா ரேறிப் புடைக்கிறதே. . .

புழு விளைந்திடு உளப் புதர் மறைந் திட பிறர்
பிழை பெரி தாக்கிப் பெருமித மடைபவர்
தலை உடைத்திடும் மனத் தாக்கம் எழுகையில்
உணர்வொடு கவிமழை பொழிகிறதே. . . ஓ .. .
உலகிடை பரவிட விழைகிறதே. . .

மாதா. . . .
மலரடியில். . .

வானில். . . பருந்தொன்று
வட்டம் இடுகிறது. . .
கோழிக்குஞ்சொன்றைக்
குறி பார்த்தே நெடு நேரம்

வானில். . . பருந்தொன்று
வட்டம் இடுகிறது. . .

தாய்க்கோழி மிக்க
தய வாகச் சொல்கிறது
போகாதீர்; மக்காள்
போனால் தனியாக
ஏதும் நடக்கும். . .
எமன்கள் திரிவார்கள்

அன்னையின் ஆணை
அது கேளாக் குஞ்சொன்று
தன்னை மறந்தே
தாவித் திரிகிறது

சந்தர்ப்பம் பார்த்த
சதி காரப் பருந்து
அந்தக் குஞ்சை
மிக அழகாகப் பற்றியது

மாதா மலரடியில். . .
மகவுக்குச் சொர்க்கமென
தாகா நபி சொன்ன
தத்துவம் மறந்ததனால். . .

இந்தக் கதியோ. . .
எனக்கிங்கு நேர்ந்ததுவோ. . .?
என்றே குஞ்சும் .. . .
இதயத்துள். . பொருமுகையில். . .
அந்தப் பருந்து. . . .
அதையுண்டு மகிழ்கிறது. . .

வானில். . . பருந்தொன்று
வட்டம் இடுகிறது. . .
கோழிக்குஞ்சொன்றைக்
குறி பார்த்தே நெடு நேரம்

தியாகத்தில் மலர்ந்ததே தீனுல் இஸ்லாம்

வெங்கொடும் பாலை வனம் எனப்படு
வேங்கை மனத்திடம் கொண்டபேரிடை
திங்கள் ஒளிப்பிளம் பாமெழில் சோதியாய்
தெய்வ அருள் வளர் மாமணி நாயகம்
சங்கை நிகர் மிகை பொங்கும் கடல் எனச்
சத்திய வான் மறை சாற்றும் எழில் வழி
எங்கும் நிறைந்து, தவழ்ந்து மகிழ்ந்திட
ஏந்தல் நபி புவியில் பிறந்தார்களே

சத்தியமற்றவர் மத்தியில் நன் நபி
நற்குருவாய் தம தாணை பரப்பிட
உத்தரவிட்டனர், ஓர்மை தௌஹீதினை
ஓங்கு புகழ் இறை ஆணையை ஏற்றவர்
புத்தி புகட்டினர்; புன்மை புதைந்திடப்
புல்லர்களோ வழி ஏற்க மறுத்தனர்
நித்தமும் சத்திய சீலரைத் திட்டியே
நிந்தனை செய்து நிறைவின்பம் கண்டனர்

முன்னைய மார்க்க விளிம்பினில் வீழ்ந்தவர்
முகம்மது என்பவர் பாதையைக் கேட்டதும்
உன்னியெழுந்தனர்; உத்பா, அபூ ஜஹீல்
உமையா போன்ற பெருந்தலைவர் உடன்
கொன்று முஹம்மத் சிரம் கொணர்வோர்க்குயர்
கொள்ளைப் பரிசில்கள் ஈவதாய்க்கூடியே
நின்று முழக்கினர், நித்திரை இன்றியே
நீசர் நபியினைத் தேடியலைந்தனர்

வீணர்கள் வேட்கை, விழல் எனப் போகவே
வேற்று வழியினைக் கூடியே ஆய்ந்தனர்
தோன்றவே, யோசனை தூயநந் நாதரை
தூக்க நிலையில் தொலைத்திடலாமென
பாணம் தொடுக்கப்படுகையில் பார்த்ததும்
பாத்திமா துணை வேந்தர் அலி (ரலி)
காணவே கண்ணி லடித்துப் புலம்பியே
கங்குல் பட எங்கும் தேடியலைந்தனர்

உத்தமராம் அபூ பக்கருடன் நபி
உன்னத மக்கா விட்டு ஒதுங்கியே
கர்த்தனருள் பெற கங்குற் பொழுதினில்
கண்ட "தெளர்" குகை சென்று மறைந்தனர்
இத்தகு வேளையில் இழிஞர் நெருங்கவும்
என்னதான் செய்வது . . .? என்று அபூபக்கர்
சித்தம் கலங்கவே எங்களுடன் இறை
சேர்ந்து உளான் எனச் செப்பினார் அண்ணலும்

அண்ணலார் நபி ஆறுதல் வார்த்தையை
ஆண்டவன் உடன் ஏற்று சிலந்தியை
பின்னிட வலை செய்து புறாக்களும்
பெரியதாய்க் கூடு கட்டியே வாழ்வதைக்
கண்டதும் குகை வாசலை அண்மிய
கயவர்கள் இதில் யாரிருப் பாரென
எண்ணியே ஏ. . . மாந்தவராகவே
ஏகினர், இறையோனுமே காத்தனன்

சூழ்ச்சிகள் பல திட்டங்கள் தீட்டியும்
சோதி நாதரைத் தீர்த்திட நின்றவர்
வீழ்ச்சி கண்டனர்; வேற்று வழியினில்
விரும்பு மாதரை ஈகுவோம், பொன் பொருள்
ஆட்சி நல்குவோம், ஆன திரவியம்
அனைத்தும் காலடி கொண்டு நிரப்புவோம்
வாழ்த்துவோம், பிரசாரத்தை விட்டிடில்
வள்ளலே! எனச் சொல்லியே பார்த்தனர்

ஈட்டிகள் பல ஈரலில் ஏறினும்
இரவி, ஆதவன் என்கரம் வைப்பினும்
ஆட்டுகின்ற பம்பரமாய்ச் சுழன்
றாடுகின்றவர் நானிலவேயென
வேட்டுகள் பல தீர்ப்பதுவாய் உள
வேட்கையால் இறை தூதர் மொழிந்ததுமே
நாட்டமே நிறைவேற எழுந்தனர்
நாசகாரிகள் நாகமாய்ச் சீறினர்

எங்கள் மார்க்கம் இவனால் அழிவதா?
என்ன செய்குவோம்; என்று முழங்கியே
பொங்கியெழுந்தனர்; போர்ப்பறை கொட்டினர்
புழுதி, தூசுகள் விண்ணைத் துளாவின
சங்கை நபிகள் தோழர் எல்லோருடன்
சவாலை ஏற்றுச் சமரில் இறங்கினர்
எங்கும் நிறைந்த ஏகனின் இன்னருள்
ஏந்தல் பக்கமே இதமாய் வந்தது

பொருதி வந்த புன்னெறி கொண்டவர்
பொறுமை நபியின் போர்த்திறன் கண்டதும்
சருகுபோல மண்ணில் உதிர்ந்தனர்
சமாதியாகி சமரில் மடிந்தனர்
அருமை நபியும் சிறை பட்டோர்களை
அன்பு கனிய அணைத்துக் கொண்டனர்
இறுதி நபியின் இச்செயல் கண்டதும்
இன்னும் பலபேர் இசுலாம் ஆயினர்

உலகம் உய்ய உதித்த உத்தமர்
உறுதி மேலும் இறுகி நின்றது
கலகம் செய்தோர், கருணை நபியின்
கனிவைக் கண்டு கவுரலாயினர்
நிலவின் முன்னே இருள்கள் மெல்ல
நீங்கிப் புதிய ஒளிலையப் பெற்றதால்
திலகம் போன்ற தீனுல் இஸ்லாம்
திங்கள் நபியால் தீரம் கண்டதே!

அஞ்சா நெஞ்சும், ஆழ்ந்த பக்தியும்
அடையப் பெற்ற அருமை நபியின்
நெஞ்சுரம் நய வஞ்ச கர்களை
நித்தமும் தலை சாய வைத்தது
கொஞ்சமா? நபி பட்ட வேதனை
கொடுமை கூறிட இதயம் தாங்குமா?
அஞ்சுமே! இவ் வவனி கேட்டிடில்
அரிய தியாகமே! சாந்தி மார்க்கமே!

இலட்சியம் இல்லா இலக்கியம் என்பது உப்பில்லாப் பண்டம் போல ஒன்றுக்கும் உதவாததாகவே மதிக்கப்படுகின்றது. உலகத்தின்கண் ஊசலாடுகின்ற ஊழல்களைத் தான் சார்ந்ததாக இலக்கியத்தின் ஊடாக வெளிக்கொணர விழைவதற்கு முன் அப்படைப்பாளியான இலக்கியவாதி பரிசுத்தமான இலட்சியநோக்கும், பக்குவமான தன்மையும் கொண்டவராக இருந்தாலன்றி, அப்படைப்பால் சமூகத்திற்கோ ... தனக்கோ எந்தவித நன்மையும் ஏற்படப்போவதில்லை.

இந்தவகையில் கவிதைத் துறை ஊழல் ஒழிப்பில் ஒரு கலங்கரை விளக்கமாக அமைகிறது. உள்ளத்தில் ஊற்றெடுக்கும் உணர்வுகள் கவிந்து அது மாற்றாரின் மனக்கண்முன் ஊடறுத்து உள்ளத்தில் தைக்கின்றபோது அது கவி + தை (கவிதை) ஆகிறது. 1976களில் இருந்து நேரடியாக அனுபவித்த பல அனுபவங்களின் சங்கமத்தில் அவை இதயக் கனல்களாக எரிந்தபோது ஏற்பட்ட உணர்வுக் கருவூலங்களே "கனலாய் எரிகிறது" என்ற இக் கவிதைத் தொகுப்பின் வெளிப்பாடாகும்.

1984ம் ஆண்டு வர்த்தகக் கப்பல்துறை அமைச்சின் ஆதரவில் ஆக்கவுரிமை வியாபாரக்குறி பதிவகத்தினால் தேசிய ரீதியிலான ஊக்குவிப்பு இரண்டாம் வருட இலக்கியப் போட்டியின் ஒரு அங்கமான இருபத்தைந்து கவிதைகள் கொண்ட அதிசிறந்த கவிதைத் தொகுப்பிற்கான முதற்பரிசுக்கான சான்றிதழும், ரூபா ஐயாயிரம் ரொக்கப்பரிசும் கிடைத்தன. அக்கவிதைகளோடு மேலும் பல கவிதைகளை உள்ளடக்கி இத் தொகுப்பை புரவலர் புத்தகப் பூங்கா ஊடாக ஞானம் பதிப்பகத்தாரால் வெளியிட்டு வைப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். இதய சுத்தியோடு எதனையும் மென்மேலும் வளர வேண்டும் என வாழ்த்துகிறேன்.

K.M.A. அஸீஸ்

ISBN 978 - 955 - 8354 - 16 - 2

ஞானம் பதிப்பகம்

UNIE ARTS (PVT) LTD., 48B, BLOEMENDHAL ROAD, COLOMBO 13. TEL: 2330195